மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 10 வெள்ளிக்கிழமை (22.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 88

# வன்னிப் பகுதியில் பட்டினிச் சாவு அபாயம்!

# உணவு, மருந்து எடுத்துச் செல்லத் தடை!!

## அரசின் பாரிய மனித உரிமை மீறல் என்று நாடாளுமன்றில் சம்பந்தன் சாடல்

கொழும்பு,பெப்ரவரி22

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாப் பகுதிகளில் - வன்னிப் பிரதேசங்களில் - பட்டினிச்சாவுகள் ஏற்படக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

அந்தப் பிரதேசங்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு - அரசு - படையினர் தடை விதித்துள்ளமையின் விளைவே இதுவாகும்.

இது, தமிழ்மக்களுக்கு எதிராக அரசு கட்டவிழ்த்துள்ள பாரிய மனித உரிமை மீறலாகும்; உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சட்டங்களை மீறும் நடவடிக்கையுமாகும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கண்டித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 20 ஆயிரத்து 256 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 148 பேருக்கு வழங்குவதற்காக உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுப் பொருள்களை அங்கு கொண்டு செல்லவிடாமல் படைத்தரப்பு தடுத்து நிறுத்தியிருக்கின்றது.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியிருந்தும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அங்கொலா அம்மையார் கிளிநொச்சி செல்லமாட்டார்

கொழும்பு,பெப்.22

இலங்கைக்கு ஒரு வார விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி அங்கொலா கனே அம்மையார் கிளிநொச்சிக்குச் செல்லமாட்டார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்த அவர், நேற்றுத் தமது பேச்சுகளை ஆரம்பித்தார். ஐ.நா. சார்பு அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நேற்று அவர் பேச்சுக்களை நடத்தினார்.

மட்டக்களப்புக்குச் சென்று நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் நிலைமை குறித்து அறிவார். ஆனால் அவர் கிளிநொச்சிக்குச் செல்லமாட்டார் என்று அரச சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1)

## பலாலி நோக்கிப் புறப்பட்ட விமானம் தரையிறக்கப்பட்டது

கொழும்பு,பெப்.22

இரத்மலானையில் இருந்து பலாலிக்கு நேற்றுக்காலை 9 மணிக்குப் புறப்பட்ட தனியார் பயணிகள் விமானம் ஒன்று பத்து நிமிடத்தில் மீளவும் தரையிறக்கப்பட்டது.

விமானம் புறப்பட்டு சுமார் பத்து நிமிடங்களில் அதன் ஓர் இயந்திரத்தின் (என்ஜினின்) வெப்பநிலை நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாகக் காணப்பட்டதை அவதானித்த விமானி, விமானத்தை மீளத் தரையிறக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு மணி நேர தாமதத்துடன் நிறுவனத்தின் மற்றொரு விமானத்தில் பலாலிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# அடக்குமுறை தொடருமானால் ஈழமும் கொசோவோவாகும்!

## நாடாளுமன்றத்தில் சிவநேசன் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு,பெப்.22

தமிழ் மக்களையும், தமிழ் எம்.பிக்களையும் அரசுதொடர்ந்தும் அடக்கி ஆளமுற்பட்டால் - அவர்களை அவமானப்படுத்தவும் அடிமைப்படுத்தவும் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமானால் - கொசோவோவைப் போல் வடக்கு - கிழக்கும் விரைவில் தனிநாடாக மாறும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான சிவநேசன் நேற்று நாடாளுமன்றில் எச்சரிக்கை விடுத்தார்.

சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி நேற்று சபையில் சிவநேசன் எம்.பி. உரையாற்றினார். அதை ஒட்டி சிவநேசனுக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்குமிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தின் போதே சிவநேசன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறிய அம்சங்கள் வருமாறு:-

நானும் கனகரட்னம் எம்.பியும் 19ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விற்காக 18ஆம் திகதி கிளிநொச்சியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொசோவோவைத் தனிநாடாக அங்கீகரிக்க நோர்வேயும் முடிவு

ஒஸ்லோ,பெப்.22

கொசோவோவைத் தனிநாடாக நோர்வேயும் அங்கீகரிக்க உள்ளதாக நோர்வே வெளியுறவு அமைச்சகம் நேற்றுமுன்தினம் (புதன் கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொசோவோவைத் தனிநாடாக நோர்வே அங்கீகரிப்பதற்கு பல காரணிகள் உள்ளன என நோர்வே வெளியுறவு அமைச்சர் யூணாஸ் கார் ஸ்தோர தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தின் உறுதித்தன்மையைக் கருத்தில் கொண்டு, கொசோவோ விவகாரத்தில் அனைத்துலக சமூகம் ஒருமித்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் மீதான சோதனை தவிர்க்க முடியாததாம்!

### அமைச்சர் ஜெயராஜ் கொடுக்கும் விளக்கம் இது



கொழும்பு,பெப். 22

''நாட்டில் இடம்பெறும் தாக்குதல்கள் கிளிநொச்சியில் இருந்தே திட்டமிடப்படுகின்றன. இதனால் கிளிநொச்சியில் இருந்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடுமையாகச் சோதனைக்கு உட்படுவதைத் தவிர்க்க முடியாது.''

- இவ்வாறு அரசுத் தரப்பின் பிரதான கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான சிவநேசன் நேற்று சபையில் எழுப்பிய சிறப்புரிமைப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துக் கூறும்போதே அமைச்சர் ஜெயராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இவ்விவகாரம் தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

நாட்டின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அமைச்சர்களினதும் எம்.பிக்களினதும் வாகனங்கள் படையினரால் சோதனை செய்யப்படுகின்றன.

தற்போதைய நிலைமையில் இந்தச் சோதனை நடவடிக்கையை நாம் நிராகரிக்க முடியாது. அதிலும் கிளிநொச்சியில் இருந்து வரும் வாகனங்களைக் கட்டாயம் சோதனையிட்டே ஆகவேண்டும். (12ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிகளும் சம்பள உயர்வு கோரி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

கொழும்பு,பெப்.22

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் முதல் தடவையாக நீதிமன்ற நீதிபதிகளும், நீதிவான்களும் சம்பள உயர்வு கோரி வழக்குத் தாக்கல் செய்யும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

நேற்று இலங்கையின் மேல் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் சார்பிலும், நீதிவான்கள் சார்பிலும் சம்பள உயர்வு கோரும் வகையில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கி நிலைகள் அழிக்கப்பட்டதாக படையினர் அறிவிப்பு

கொழும்பு, பெப்.22

ஸ்ரீலங்கா விமானப் படையினரின் தாக்குதலில் மன்னார், முல்லைத்தீவு பிரசேதங்களில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பீரங்கி நிலைகள் முழுமையாக நிர்மூலமாக்கப்பட்டன என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றையாட்சிக்கு அப்பால் - பிரிவினைக்கு குறைவான தீர்வை முன்வைக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்

### சர்வதேச நெருக்கடிகள் அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, பெப்.22

இலங்கையில் யுத்த நிலைமை தீவிரமடைந்து மோசமான மனிதப் பேரவலம் ஏற்படும் ஆபத்து நிலை உருவாகி வருகின்றது. இதைத் தவிர்ப்பதற்காக - நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக - சர்வதேசம் விரைந்து இதில் தலையிட வேண்டும். தனது செல்வாக்கைச் செலுத்த வேண்டும். ஒன்றையாட்சிக்கு அப்பால் செல்லும் - அதேவேளை தனித் தமிழ்த் தேசத்துக்குக் குறைவான - தீர்வை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை அது எடுக்க வேண்டும்.

சுவிட்ஸர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு (International Crisis Group) இப்படிக் கோரியிருக்கின்றது.

இலங்கை விவகாரம் தொடர்பாக, அரசியல் ரீதியாக, சக்திவாய்ந்த குழுவொன்றை ஏற்படுத்துவதற்காக இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் மத்தியில் ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சங்கானை,பெப்.22

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்களின் நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஆச்சிரம பேரவை தலைவர் க.அருள்லிங்கம் தெரிவித்தார். (1-29)

## இணைப்பு பெற்ற ஆசிரியர்ளுக்கு இன்று முதல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,பெப்.22

வெளிமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வலயம் ஒன்றில் இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன என்று யாழ். வலயக் கல்வி அலுவலக கணக்காளர் க.கமலரூபன் தெரிவித்தார்.

ஒருவார காலத்துக்குள் அவற்றை பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (1-203)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் ஏனைய மாவட்ட ஆசிரியர்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாத கொடுப்பனவு இன்று வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது.

இவ்வருடம் (2008) இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் வரவுச் சான்றிதழ்களுடன் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியினையும் கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

## காக்கைதீவில் நாளை களப் பயிற்சிப் பட்டறை

பங்கேற்புடனான தேவை பகுப்பாய்வு தொடர்பான களப் பயிற்சி பட்டறை நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் காக்கைதீவு கிராமத்தில் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ் மாவட்ட அரச அதிபரின் தலைமையில் மீள்எழுச்சி திட்டம் நியாப் அலுவலகத்தினால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதில் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்துகொள்கிறார்கள்.(1-249)


**VEMBADI GIRLS' HIGH SCHOOL JAFFNA**

**Annual Inter House Sportsmeet- 2008**

Venue : College Ground

Date : 23-02-2008 Saturday, 1.00 p.m

*Chief Guests:*

Mr. K.Ganesh

*Government Agent (District Secretariat, Jaffna)*

&

Mrs.Parameswary Ganesh

Parents, past pupils and well wishers are cordially invited.

Principal, Staff and Students,
Vembadi Girls' High School, Jaffna.

(A)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு. C.A.தயாபரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### அருளானந்தம் கிறிஸ்ரி (சிங்கம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(71356)

## மரண அறிவித்தல்

### *சின்னத்தம்பி முருகையா*

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சிமெந்து ஆலை)



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கு, மாவத்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி முருகையா நேற்று (21.02.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லமாகிய அராலி தெற்கு மாவத்தையில் நடைபெற்று பூதவுடல் ந.ப. 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(71359)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.21

கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.செந்தில்குமரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரசர்மா கலந்து கொள்வார்.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

கல்லூரி அதிபர் திருமதி.வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் கலந்துகொள்வார்.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.21

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

* * *

கட்டைவேலி,பெப்.21

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை பதில் நீதிவானும், சட்டத்தரணியுமான பொ.குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி புனிதம் குமாரசாமி பரிசில்களை வழங்குவார். (1-275-70-218)

* * *

நல்லூர்,பெப்.21

யாழ்ப்பாணம் சென்மேரீஸ் (ஓ.எல்.ஆர்) றோ. க. த.க. பாடசாலை இல்ல மெய் வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை உள்ளகத் திடலில் அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரனும் கௌரவ விருந்தினராக புனித அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த அருட்திரு. ம.றெஜி இராஜேஸ்வரனும் கலந்து கொள்வர். யா/சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய அதிபர். திருமதி. ட.மகேஸ்வரன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். (1-111)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்கலவன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மு.ப 9.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

பாடசாலை அதிபர் க.சுந்தர்லிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்வி அலுவலய கணக்காளர் சி.பரதன் கலந்து கொள்வார் (1-302)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு கலந்துகொள்கிறார்.

* * *

யாழ்ப்பாணம் பெப்.22

காரைநகர் காலநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற உள்ளது.

கல்லூரி அதிபர் கா. குமாரவேலு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தோல் வைத்திய நிபுணர் டாக்டர் கணேசன் ஞானசோதிலிங்கம் கலந்து கொள்வார். (1-250)

* * *

யாழ்ப்பாணம் பெப்.22

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற உள்ளது.

அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன், திருமதி லங்கினி ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (1-250)

## திறமைகாண் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.22

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ் பணி புரியும் 2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு, நாளை மறுதினம் யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்த வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சை, பிற்போடப்பட்டுள்ளது என யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கமைய இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது எனவும் -

பரீட்சை நடைபெறும் திகதி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார் (1-202)


## தவறிவிட்டது

நித்தியானந்தன் நிலோசன் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 871214310V), சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் பதிவுப் பத்திரம் என்பன சாட்டிக்கும் வேலணை வங்களாவடிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சாட்டி புனித சிந்தாத்திரை மாதா கோயில் பரிபாலகரிடம் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (71362)


## சிந்தாத்திரை மாதா வழிபாடுகளில் கலந்துகொள்ள போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம் பெப்.22

சாட்டி புனித சிந்தாத்திரை மாத திருத்தலத்தில் வாராந்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற தவக்கால தியான வழிபாடுகளில் கலந்துகொள்ளும் யாத்திரிகளுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

தவக்காலத்தை முன்னிட்டு சாட்டி திருத்தலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 4.30மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலையில் 8. 30 மணிமுதல் தவக்காலச் சிந்தனை, ஒப்புரவு அருட்சாதனம் மற்றும் திருப்பலி என்பனவும் இடம்பெற்று வருகின்றன.

இவற்றில் கலந்துகொள்ளும் யாத்திரிகளின் வசதி கருதி சாட்டி பரிபாலகர் ஊடாக போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் -

யாத்திரிகர்கள், ஊர்காவற்றுறை(780) மற்றும் குறிகாட்டுவான் (776)ஆகிய வழி பஸ்களில் பயணிக்கமுடியும் என்றும் - சாட்டி திருத்தல பரிபாலகர் அருட் திரு ஸ்ரனிஸ்லஸ் பிலிப் அடிகளார் தெரிவித்துள்ளார். (அ-2)

## சாவகச்சேரியில் இன்று மருத்தகம் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

சாவகச்சேரியில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் இன்று நண்பகல் 12 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினரால் நடத்தப்படவுள்ள மருந்தகத்தினை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியக் காலநிதி ஆ.கேதீஸ்வரன் திறந்து வைப்பார். (1-207)

## யாழ்.பல்கலையில் தடகள விளையாட்டு

வலி.வடக்கு,பெப்.22

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தால் 2007, 2008ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்வி கற்க தெரிவு செய் யப்பட்ட மாணவர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.


வெளிவாரி பட்டப் படிப்புகளுக்கான

நாடகமும் அரங்கியலும்

G.A.Q., Part I, Part II

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்.

ஆரம்பம் : 02.03.2008 (மு.ப. 9 மணி)

தொடர்புகளுக்கு:

அபிராமி கொமினிக்கேசன்,


212 இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

தொ.பே. 0214591979, 0776181133 0212226989

(71361)


## மரண அறிவித்தல்

### *அன்னப்பா இராசப்பா*



(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபால் திணைக்களம்)

மானிப்பாய் தெற்கு இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பா இராசப்பா 18.02.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பா - இராசம்மா தம்பதியரின் மகனும் அல்லிமலரின் அன்புக் கணவரும் மகேஸ்வரன், திலகவதி, விக்கினேஸ்வரன் (கனடா), ஜெயவதி(கனடா) நகுலேஸ்வரன்(இ.போ.ச., கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராதேவி, மோகனராசா, கண்ணன், சுபாசினி, அகிலா ஆகியோரின் மாமனாரும் காலஞ் சென்றவர்களான நெல்லியப்பா, செல்லப்பா ஆகியோரின் சகோதரனும் வாமதேவன், நாகரத்தினம் பத்மாவதி, சேதுலிங்கம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமகுரு, சின்னத்தம்பி, சின்னம்மா, சோதிப்பிள்ளை மற்றும் சங்கரப்பிள்ளை, சிவகுரு ஆகியோரின் மைத்துனரும் சிந்தூரி, ரமீதன், ஹரிசா, வளவன், மாறன், நேருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2008) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(71357)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நகரசபைப் பொதுநூல் நிலையங்களின் தேசிய வாசிப்பு மாத விழா கடந்த செவ்வாய்க்கிழமை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் முன்பள்ளி மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும் - நிகழ்வில் வெளியிடப்பட்ட 'நகரணி' சஞ்சிகையின் வெளியீட்டுரையைச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

## சிறப்புற நடைபெற்ற சாவகச்சேரி நகரசபை நூலகங்களின் தேசிய வாசிப்பு மாத விழா

யாழ்ப்பாணம்,பெப்.22

சாவகச்சேரி நகரசபை பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாத விழா கடந்த செவ்வாய்க்கிழமை நகரசபை கேட்போர்கூடத்தில். நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நகரசபையின் காலாண்டு சஞ்சிகையான ''நகரணி'' வெளியிட்டு வைக்கப்பட்டது. வெளியீட்டுரையினை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு நிகழ்த்தினார். முதற்பிரதியைச் சாவகச்சேரிப் பொதுநூலக அபிவிருத்திச் சபை உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச விவாகப் பதிவாளருமான க. மோகனராஜலிங்கம், நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகத்திடம் பெற்றுக் கொண்டார்.

விழாவில் யாழ். மாநகரசபை பொதுநூலக பிரதம நூலகர் வ.தனபாலசிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி தியாகராசா உட்பட்ப பலர் உரையாற்றினர்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கும் கடந்த வருடம் முன்பள்ளிகளில் கற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (202-207)

## வலிகாமம் கிழக்குப் பிரதேசத்துக்கென பண்பாட்டுப் பேரவை அங்குரார்ப்பணம்

நீர்வேலி,பெப்.22

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோரை இணைத்து பண்பாட்டுப் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

இதையடுத்து கடந்த 4 ஆண்டுகளாக நடைபெறாதிருக்கும் பிரதேச பண்பாட்டு விழாவை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கலை ஞர்கள், அலுவலர்கள், புத்திஜிவிகள் ஆகியோரை இணைத்து கடந்த 13 ஆம் திகதி பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போதே பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். பண்பாட்டு விழாவை எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் நடத்தி முடிப் பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (202-110)

## மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்த நவாலி ம.வியில் உளவளத்துணை அலகு

யாழ்ப்பாணம்,பெப்.22

இன்றைய சூழலில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு உளவளச் சிகிச்சையளித்து உள ஆற்றலை மேம்பாடடையச் செய்யும் நோக்குடன் நவாலி மகா வித்தியாலயத்தில் உளவளத் துணை அலகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாணவர்களின் கல்வி, அபிவிருத்தி மற்றும் மனவெழுச்சி செயற்பாடுகளின் ஊடாக உள ஆற்றலை மேம்பாடு செய்ய உள வளத்துணை அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் உளவளம் தொடர்பான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதன்மூலம் பாதிக்கப்பட்ட சகல மாணவர்களையும் நல்ல அபி விருத்திச் சூழ்லுக்குக் கொண்டு வந்து மாண வர்களைக் கல்வியியலாளர்களாக மாற்றலாம்.

தற்போது பாடசாலைகளில் உளவளத் துணை அலகு உருவாக்கிச் செயற்படுத்து மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கோரிவருகின்றார்.

அந்த வகையில் உளவளத்துணை அலகு ஒன்று உருவாக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

அதற்கெனப் பயிற்றப்பட்ட உளவளத் துணை சம்பந்தமான ஆசிரியர் ஒருவரை நியமித்து அபிவிருத்தி செய்து வருகின்றேன் - என்றார். (202-95)

## வேலணைப் பிரதேசத்தின் 240 விவசாயிகளுக்கு சிறுதானியப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 240 விவசாயிகள் சிறுபோக சிறுதானியப் பயிர்ச்செய்கை மூலம் ஊக்குவிக்கப்பட வுள்ளனர்.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

பெரும்போக நெல் அறுவடை முடிந்த் பின்னர் சோளச் செய்கையில் 30 விவசாயிகளும் கச்சான் செய்கையில் 10 விவசாயிகளும் எள் செய்கையில் 50 விவசாயிகளும் பயறு செய்கையில் 150 விவசாயிகளும் இவ்வருட சிறுதானிய செய்கையில் ஊக்குவிக்கபடவுள்ளனர்.

இதில் மண்கும்பான் விவசாயிகள் நெற் செய்கையில் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மண்கும்பான், வேலணை, சரவணை ஆகிய பகுதிகளில் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பயன்தரு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

பழ மரக் கன்றுகள் பெற்ற பயனாளிகள் அதனை முறையாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் - இதன் முன்னேற்ற அறிக்கைகளை கிராம அதிகாரிகள் பிதேச செயலருக்கு அறிவிக்கவேண்டும் எனவும் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-95)

## தலைமைத்துவப் பண்புகள் சமூகத்தில் வளர்க்கப்பட வேண்டியது அவசியம்

### முதியோர் இல்லத் திறப்புவிழாவில் பரு. நீதிபதி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.22

இன்று சமூகத்தில் தலைமைத்துவப் பண்பு குன்றி வருவதனாலேயே சமூகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது. சமூகத்தில் தலைமைத்துவப் பண்பு வளர்க்கப்பட வேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும்.

மேற்கண்டவாறு வட - இலங்கை ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட முதியோர் இல்லத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் குறிப்பிட்டார்.

விழாவிற்கு ஆச்சிரம தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ்.அரிப்பிரசாதம் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய நீதிபதி அரியநாயகம் குறிப்பிட்டதாவது:



தலைவர்கள் சமூகத்தை நல்வழிப்படுத்திச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். ஆளுமை வாய்ந்த சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் சமூகத்தின் இலட்சியம் வெற்றி பெறும். தவறுகள் எங்கும் நடக்கின்றன. தவறு என்று தெரிந்ததும் அத்தவறு திருத்தப் பட்டு விட வேண்டும். தவறுகள் தொடரக் கூடாது. தொடர அனுமதி அளிக்கவும் கூடாது. அப்போது தான் சமூகம் எதிர்பார்க்கும் இலட்சியத்தில் வெற்றிபெற முடியும். சிறந்த தலைமைத் துவத்தின் கீழ் குழப்பங்கள், ஊழல்களுக்கு இடமேயிருக்காது.

பொது சேவையாளர்கள் சுயநலமின்றி சேவை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும். நிர்வாகச் செயற்பாடுகளில் தூய்மையுடன் செயற்பட வேண்டும். நிர்வாகச் சிக்கல்கள் இலகுவாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆளுமை மிக்கச் சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் சமூகத்தை உயர்வடையச் செய்ய எதிர்காலத்தை சுபீட்சம் பெறச் செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

ஆச்சிரமம் அபிவிருத்தியடைந்து சேவைகளைச் சிறப்பாக வழங்க வேண்டும். இன்றைய ஆதரவற்ற சிறுவர்கள், முதியோர்கள் வளமுடன் வாழ்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும் -என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வடக்குப் பிரதேசெயலர் ஆர்.வரதீஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசன், இளைப்பாறிய அதிபர் ரி.நடராஜா ஆகியோரும் உரையாற்றினர். (218)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தென்மராட்சிப் பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணத் தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய காலத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நெறியினை அண்மையில் சங்கத்தானை யிலுள்ள கழகத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் ஆரம்பித்துள்ளனர்.

கழகத் தலைவர் லயன் இ.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்குச் சர்வதேச லயன்ஸ்கழக 306 பி 1 மாவட்டத் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மாவட்டத் தலைவர்லயன்.எஸ்.கனகராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் மாவட்டத் தலைவர் (வீதி, போக்குவரத்து) லயன் கா.சற்குணதேவன், வலயத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ், ஸ்கொட் கணனிப் பயிற்சி நிறுவன ஆசிரியர் ம.நடனதேவன் உட்படப் பலர் உரையாற்றினர். (202- 207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்.சைவபரிபாலன சபையின் 96ஆவது பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

★ ★ ★

கொழும்புத்துறை, பெப்.22

கொழும்புத்துறைக் கடற்றொழிலாளர் சங்க அனுசரணையுடன் இலவச கண்பரிசோதனையும் பல் பற்றிய ஆலோசனையும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள கடற்றொழிலாளர் சங்கத் தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும். (202-224)

★ ★ ★

சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபு தினம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் அதிபர் ஆ.ஜெகநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது. (202-160)

## ஸ்கந்தாவில் இன்று நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், பெப்.22

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வைசா வி.சிவசுப்பிரமணியத்தின் 12 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சிவகுமாரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 'அறிவின் வழியான சமூக மேம்பாடு சாதனைகளும் சவால்களும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (202)

## ஆனைக்கோட்டை முன்பள்ளி மாணவர்களுக்கு அன்பளிப்பு

நவாலி, பெப்.22

ஆனைக்கோட்டை (ஜே/133) கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முத்தமிழ் முன்பள்ளி, ஆதவன் முன்பள்ளி, சிறுவர் முன்பள்ளி, விநாயகர் முன்பள்ளி ஆகியவற்றிற்கு ஆனைக்கோட்டை பொதுச்சுகாதார ... பற்பசையும், பற்தூரிகைகளும் வழங்கப்பட்டுள்ளன. (202-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஒப்பந்தத்தைச் செயற்படுத்த அமெரிக்கா மூன்று மாதக் காலக்கெடு

புதுடில்லி, பெப். 22

இடதுசாரிக்கட்சிகளின் எதிர்ப்புகளால் அணுசத்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அணுசத்தி ஒப்பந்தத்தை



செயற்படுத்த, இந்தியாவுக்கு அமெரிக்கா இறுதிக் காலக்கெடுவையும் விதித்துள்ளது. ''3 மாதங்களுக்குள் இந்தியா தனது முடிவைத் தெரிவிக்க வேண்டும்'' - என்று அமெரிக்க கேட்டுள்ளது.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே ஏற்பட்ட அணுசத்தி ஒப்பந்தத்துக்கு, மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளித்து வரும் இடதுசாரிக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் மத்திய அரசு கடும் விளைவுகளைச சந்திக்க நேரிடும் என்று அந்தக் கட்சிகள் எச்சரிக்கை விடுத்து இருக்கின்றன.

மேலும், இந்த ஒப்பந்தம் குறித்துச் சர்வதேச அணுசக்திக் கழகத்துடனும், அணுசத்தி பொருள்கள் விநியோகம் செய்யும் நாடுகளுடனும் இந்தியா பேச்சு நடத்தி உன்பாடு காணவேண்டும். இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்புக் காரணமாக இந்தப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமெரிக்க நாடாளுமன்ற ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தம் அமுலுக்கு வரும்.

இந்த நிலையில், அணுசத்தி ஒப்பந்தம் குறித்து தனது இறுதி முடிவை இன்னும் 3 மாதங்களுக்குள் இந்தியா தெரிவிக்க வேண்டும் என்று இந்தியாவுக்கு அமெரிக்கா இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லி வந்துள்ள அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் ஆர்பைடன், ஜான் கெர்ரி ஆகியோர் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து அணுசக்தி ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள்குறித்துப்பேச்சுநடத்தினார்கள்.

பேச்சு முடிந்ததும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகவியலார்களுக்கு கூறியவை வருமாறு:-

''இந்தியா - அமெரிக்கா இடையேயான அணுசத்தி ஒப்பந்தம் பற்றியும், அந்த ஒப்பந்தத்துக்கு இந்தியா விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசினோம். இந்த ஒப்பந்தத்துக்கு இந்தியாவிலிருந்து எதிர்ப்பு வருவதால் ஏற்பட்டுள்ள குழப்பநிலை மற்றும் சிரமங்கள் குறித்து அவர் எங்களிடம் எடுத்துக் கூறினார். என்றாலும் ஒப்பந்தத்தைச் செயற்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவில் இருந்து வரும் பிரச்சினைகள், நெருக்கடிகள் பற்றி எங்களுக்குத் தெரியும். ஆனால், இந்த ஒப்பந்தம் செயற்பாட்டுக்கு வராமல் போனால் இந்தியா - அமெரிக்கா இடையேக்ருத்து வேறுபாடு உருவாகி, இருநாடுகளுக்கும் இடையேயான உறவில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்'' - என்று கூறினார்.

## ரவிசங்கர் குருஜிக்கு 'டாக்டர்' பட்டம்

குண்டூர், பெப்.22

ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள நாகர்ஜீனா பல்கலைக்கழகம். யோகா குருஜி. வாழும் கலை நிபுணர் ரவிசங்கருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

யோகா, தியானம் குறித்து அவர் செய்து வரும் சேவைக்காக இந்தப் பட்டம் அவருக்கு கிடைத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு விழாவிலேயே இவருக்கு இப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவில் பாடகர் ஸ்ரீநிவாஸ் உட்பட மேலும் மூவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.




# உலகத் தமிழருக்கான ஆதரவு தொடரும் வாழ்நாளையே சிறையில் கழிக்கத் தயார்!

## திருமாவளவன் சூளுரை

திட்டக்குடி, பெப்.22

உலகத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதால் வாழ்க்கை முழுவதும் சிறையில் இருந்தாலும் எனது கொள்கையை மாற்ற மாட்டேன் - இவ்வாறு கூறியுள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன்.

அவர் டாக்டர் அம்பேத்கார் நினைவு விழாவில் நேற்றுக் கலந்து கொண்டு பேசும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டைத் தலைநிமிர வைத்தவர் டாக்டர் அம்பேத்கார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒரே தலைவர் இவராவார். இந் தியாவில் வெவ்வேறு தலைவர்கள் தோன்றி னார்கள். போராட்டங் கள் நடத்தினார்கள். அவர்களுக்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்க ளின் பிரச்சினைகள் புரியவில்லை.

கால்வயிற்றுக்குப் பாடுபடும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை உயர வில்லை. அம்பேத்கார் தான் இதை வெளியே கொண்டு வந்தார். மண் ணின் மைந்தர்கள் என்பதைப் புரிய வைத்தார். அம்பேத்காரின் பேச்சு, எழுத்து மட்டும் தான் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இன்று அரசியல் நடத்தும் தலைவர்க ளுக்குக் கூட அம்பேத்கார் பற்றிப்புரிய வில்லை அஸ்வினியைப் பற்றி பேச தெரிந் தவர்கள் தான் இன்றைய தலைவர்கள். திரைப்படத்தில் பாய்ந்து பாய்ந்து அடிப்பவர்களால் தமிழ் நாட்டை வழிநடத்த முடி யுமா? அம்பேத்கார் ஒரு பண்பாட்டு புரட்சியையே செய்தார்.

ஒட்டுமொத்தமிழர்களுக்காக பாடுபடும் இயக்கம் விடுதலை சிறுத்தைகள் இயக்கம் தான். பெண்கள் அரசியல் விழிப்புணர்வு பெற வேண்டும். அதுதான் சமுதாயத்தின் வித்து. சினிமா நடிகர்கள் அரசாள ஆசைப் படலாமா? தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இதில் ஏமாறக்கூடாது.

என்னைச் சிறைவைக்க வேண்டும் என்கிறார் ஜெயலலிதா. வாழ்க்கை முழுவதும் சிறையில் இருந்தாலும் கூட எனது கொள்கை நிலைப்பாட்டை மாற்றி கொள்ள மாட்டேன். உலகத் தமிழர்களுக்கு தார்மீக ஆதரவைத் தருவோம்.

- இவ்வாறு திருமாவளவன் பேசினார். (சி)



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே ஜல்லிக்கட்டு நடந்தது. இதில் சீறிவரும் முரட்டுக் காளையை அடக்க முயற்சிக்கும் வீரர்கள்.

# புலிகளின் சீருடையுடன் காட்சியளித்த அழகிரியின் உருவப்படத்தால் சர்ச்சை!

சென்னை,பெப்.22

விடுதலைப் புலிகளின் இராணுவ உடையில் காட்சியளிக்கும்தன்மகன்அழகிரிமீதுமுதல்வர் கருணாநிதி என்ன சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

முரசொலியில் கருணாநிதி எழுதிய கடிதத்தில், ''நோக்கத்துடன் செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே பொடா சட்டம் 3(1) பிரிவின் கீழ், குற்றமாகக் கருதப்படும். 'கிரிமினல்' நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே, அது பயங்கரவாதச் செயலாகக் கருதப்படும் என்றார்.

ஆனால், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் திருமாளவளவன் கூட்டத்தைக் கூட்டியும், தடைசெய்யப் பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசியும் இருக்கிறார். 'கைது செய்து பார்' - என்று சவால் விட்டிருக்கிறார்.

இருந்தபோதிலும், அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று கருணாநிதியால் தமிழ்ச் சட்டப்பேரவையில் பேசப்பட்ட பேச்சும் முரசொலியில் அவர் எழுதிய கடிதம் என்பன மிக மிகத் தவறானவையும், சட்டவிரோதமானவையும் ஆகும்.

தனது மகன் அழகிரியின் பிறந்தநாளையொட்டி, மதுரையிலும், தென் மாவட்டங் களிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின்இராணுவஉடையில் அழகி ரியின் தலையை ஒட்டி 'களப் போராளி' என்ற 'டிஜிட்டல் போஸ்டர்'கள் வைத்தார். இதனால், திருமாவளவன் மீது நடவடிக்கை எடுக்காததால் தன் மகன் மீது [illegible] நடவடிக்கை [illegible] டிவருமே என்ற காரணத்தால் பயந்து போய் தான் இப்படியெல்லாம் பதுங்கி, பதுங்கிப் பேசி சமாளிக்கப் பார்க்கிறார்.

தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் புகைப்படம் வெளியிடுவது பிரிவு 13இன் கீழ் ஐந்தாண்டு சிறைத் தண்டனைக்கு உரிய குற்றமாகும். இதைக் கருத்தில் கொண்டு, 'களப்போராளி' என பிரபாகரனின் இராணுவ உடையில் காட்சி அளிக்கும் தன் மகன் அழகிரி, மீது கருணாநிதி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்? - இவ்வாறு ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறினார். (சி)


## கண்ணீர் அஞ்சலி

கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாக உறுப்பினரும் கோப்பாய் கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவருமாகிய

**கந்தையா சிவதாசன்** (சிவா)



அவர்கள் 18.02.2008 திங்கட்கிழமை அன்று இறைவனடி எய்திவிட்டார். இச்செய்தியைக் கேட்டு நாம் ஆறாத்துயரடைந்துள்ளோம். இவரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், திருநெல்வேலி.

(சி/551552)



உ

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வசித்து வருஷம் மாசி மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை (14.02.2008) அன்று சிவபதமடைந்த இணுவிலைச் சேர்ந்த

**வைத்தீஸ்வரக் குருக்கள் பட்டம்மா**



அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| தசாகம் (கல்லெடுப்பு) | 23.02.2008 | சனிக்கிழமை மு.ப.10 மணி |
| ஏகோதிஷ்டம். மாசிகம் | 24.02.2008 | ஞாயிற்றுக்கிழமை |
| சபிண்டீகரணம் | 25.02.2008 | திங்கட்கிழமை |
| கிருகயக்ஞம் சமாராதனை | 26.02.2008 | செவ்வாய் ந.ப. 12 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி 26.02.2008 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவி சிவபதமடைந்த செய்தியைத் தவிர்க்க முடியாத காரணத்தால் அறியத்தரமுடியாமைக்கு வருந்துகின்றோம். இறுதிக்கிரியைகளில் பங்குபற்றாதவர்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

மருமகன்:
சிவசுப்பிரமணியக் குருக்கள்.

(71297)



## தவறிவிட்டது

229, கடற்கரை வீதி, நாவாந்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் பிறிச் ஜெற்குயின் என்பவருடைய தே.அ.அ.(இல. 638052954V), விசேட அ.அ. (இல.0901010898) என்பன பூங்கனிச் சோலைக்கும் நாவாந்துறைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது 278Z, கஸ்தூரியார் வீதி, சாந்தி கபேயில் ஒப்படைத்துதவவும்.



## மரண அறிவித்தல்

**கந்தையா அம்பலவாணர்**



தங்கோடையைப் பிறப்பிடமாகவும் பலகாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அம்பலவாணர் நேற்று (21.02.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சவுந்தரம், நவரத்தினம், தம்பிராசா, சின்னத்துரை, தேவராசன், சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை (கிருஷ்ணபிள்ளை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக நீலகிரி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலகாடு, வியாவில்,
காரைநகர் மேற்கு.

(71355)

தகவல்:
க.பத்மாவதி (பெறாமகள்).


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்துக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் மாணவர்களின் ஓட்டப் போட்டியையும் அணிவகுப்பை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கமநலசேவைகள் அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் பார்வையிடுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். மூன்றாவது படத்தில் இல்ல ஆசிரியர்கள் மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு நடத்துவதையும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்

நல்லூர்,பெப்.22

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுப் பேரவையின் வருடாந்த விளையாட்டு விழாவையொட்டி ஆண், பெண்களுக்கான மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பப் படிவங்களை புதன்கிழமைக்கு முன் கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் பேரவையின் வருடாந்த விளையாட்டு விழாவுக்கான கூட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நான்கு தினங்களுக்குத் தடகளப் போட்டிகள், மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகளை நடத்துவதெனவும் -

குழு விளையாட்டுக்கள் அனைத்தும் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் தொடர்ந்து நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தெரிவித்தார்.

(1-202-111-110)

# வலிகாமம் வலய சதுரங்கப் போட்டி: தெல்லிப்பழை மகாஜனா சம்பியனானது

வலி.வடக்கு,பெப்.22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சம்பியனானது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சதுரங்கப் போட்டிகள் இடம்பெற்றன.

19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 9 பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றின.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 21 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் -

மல்லாகம் மகாவித்தியாலயம் 16 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் -

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 13 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் -

உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 11 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன. (86)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சதுரங்க, மேசைப்பந்துப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சதுரங்கம் மற்றும் மேசைப்பந்து ஆகிய அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

சதுரங்கம்

*15 வயதுப்பிரிவு - ஆண்கள்* - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

*15 வயதுப்பிரிவு - பெண்கள்* - மீசாலை விக்னேஸ்வரா ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி மகளிர் கல்லூரி,

*19 வயதுப்பிரிவு - ஆண்கள்* - மீசாலை, விக்னேஸ்வரா ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.,

*19 வயதுப்பிரிவு - பெண்கள்* - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கச்சாய் அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ம.வி.

மேசைப்பந்து

*19 வயதுப்பிரிவு - ஆண்கள்* - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

*19 வயதுப்பிரிவு பெண்கள்* - மீசாலை வீரசிங்கம் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி ம.வி. (1-207)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,பெப்.22

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் 20 கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன. (1-86)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.22

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு அராலி களுவாத்துறை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆறு பேர் பங்குபற்றும் 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய ஆட்டமாக இது இடம்பெறும்.

இப்போட்டிகளில் 26 கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

★ ★ ★

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை காலை 7.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

நாளைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

* இளவாலை இளஞ்சுடர் வி.க. எதிர் பன்னாலை கணேசன் வி.க.
* தெல்லிப்பழை யுத் யூனியன் வி.க. எதிர் மல்லாகம் ஆர்.டீ.எஸ். வி.க.
* தெல்லிப்பழை பூமா வி.க. எதிர் அளவெட்டி விநாயகர் வி.க.
* அளவெட்டி ஞானவைரவர் வி.க. எதிர் அளவெட்டி டயானா வி.க.
* தெல்லிப்பழை நாமகள் வி.க. எதிர் தெல்லிப்பழை பாரதிதாசன் வி.க.
* அளவெட்டி ஆர்.டீ.எஸ். வி.க எதிர் அளவெட்டி கலைவாணி வி.க.

மற்றும் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில் இளவாலை சென்.லூட்ஸ் வி.கழகம் மல்லாகம் எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகங்களும் முதல் சுற்றில் வெற்றி பெறும் கழகங்களுடன் மோதவுள்ளன. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

★ ★ ★

நீர்வேலி,பெப்.22

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

அன்று காலை 8 மணிமுதல் இப் போட்டிகள் இடம்பெறும். (1)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கிடையிலான பூப்பந்து சுற்றுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

★ ★ ★

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன. (1-86)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.22

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிமுதல் இடம்பெறவுள்ளன. (1-86)

## சண்டிலிப்பாயில் தடகளப் போட்டி

வலி.வடக்கு,பெப்.22

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள விளையாட்டுக் கழகங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் தாம் கலந்துகொள்ளவுள்ள தடகள விளையாட்டுப் போட்டிகள் சம்பந்தமான விவரங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் வேண்டியுள்ளார். (86)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.22

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் பாக்கியம் மாணிக்கம் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் வண.ச.கி.ஜெயக்குமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.22

ஏழாலை வடக்குஅமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவியும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளையும் கலந்துகொள்வர். (1-86)

★ ★ ★

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சீ.சிவநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.வி. குணசேகரம் கலந்துகொள்வார். (1)



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள். மாணவர்களின் ஓட்டப்போட்டி இடம்பெறுவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் இளம் விஞ்ஞானி கலாநிதி நா.சிவயோகன் பதக்கம் அணிவிப்பதையும் வெற்றிபெற்ற மாணவர்களுடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி [illegible] நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெள்ளைச்சந்தனம், மரமஞ்சள், தங்கராப் பட்டை,
கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின்
கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பார்தாமரை, கண்ணைச் சுற்றி
கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி
பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு,
சருமம் கறுத்தல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப்
பூரணமாகக் குணப்படுத்தும்.
சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை
சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
01 . 05 . 1927



உதிர்ந்தது
06 . 03 . 2007

### அமரர் சின்னத்துரை தர்மலிங்கம்

ஆண்டொன்று ஆனதோ ஆறவில்லை எம் துயரம்
நீண்டுநெடு வாழ்வில் நிழலாகியிருந்தீர்கள்
கண்ணை இமை காப்பதுபோல் காத்து வளர்த்தீர்கள்
மண்ணிருக்கும் வரை நாங்கள் மறந்திருக்க மாட்டோம்.

மண்கும்பான் மேற்கு,
வேலணை. (71287) குடும்பத்தினர்.


## வீணை, வயலின் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை, வயலின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.P.பாலகிருஷ்ணன்,
692,கே.கே.எஸ்.வீதி, பூநாறிமடத்தடி, கொக்குவில்.

## முன்பள்ளி ஆசிரியைகள் தேவை

யாழ்.நகரில் முன்பள்ளி பாலர் பாடசாலைக்கு ஆசிரியைகள் தேவை.
தொடர்பு: 123, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (71291)


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் கந்தையா சிவதாசன் (சிவா)

(பொருளாளர், சிறீமுருகன் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி, நிர்வாகசபை உறுப்பினர்,பாலர் பகல் விடுதி, நீர்வேலி)

சிறீமுருகன் அறநெறிப் பாடசாலையின் பொருளாளரும் மேற்படி பாடசாலையின் மாணவர்களான செல்வி அமிருணா, செல்வன் ஹரிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலர் பகல் விடுதியின் நிர்வாக சபை உறுப்பினருமான அமரர் கந்தையா சிவதாசன் அவர்கள் கடந்த 18.02.2008 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். இவரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

சிறீமுருகன் அறநெறிப் பாடசாலைச் சமூகமும்
பாலர் பகல் விடுதிச் சமூகமும்.
நீர்வேலி. (71296)

## கிராம சேவையாளர் இடமாற்றம்

வடமராட்சி, பெப்.22

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள புலோலி வடமேற்குப் பிரிவு கிராம சேவையாளர் எஸ்.நாகசோதிரூபன் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கரணவாய் வடக்குப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடமாற்றத்தையடுத்து புலோலி வடமேற்குப் பிரிவுக்கு பதில் கிராமசேவையாளராக மந்திகை கிராம சேவையாளர் செ.அ. ஞானச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். 202-160)

## புலோலிச் சங்கத்திற்கு களஞ்சிய அறை

பருத்தித்துறை, பெப்.22

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சிய அறை நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 12 மில்லியன் ரூபா நிதி, தேசநிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் இதற்கென வழங்கப்பட்டுள்ளது. (202-218)

## செயலமர்வு நடைபெறாது

யாழ்ப்பாணம், பெப்.22

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருந்த இ.எஸ்.டி.எவ்.பி.செயலமர்வு நடைபெறாது என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

பதிலாக பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் சம்பந்தப்பட்ட பாடசாலையினரை சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (202)


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் (Parcel) கொழும்பு - யாழ். கொழும்பு தினசரி விமானமூலமாக உடனடியாக ஏற்றி இறக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் ஏற்றி இறக்கப்படும். உங்களுக்குத் தேவையான சகல விமானப் பொருள்கள் கொழும்பிலும் யாழிலும் இருந்து கொள்வனவு செய்து தரப்படும். பூதவுடல்களும் விமானமூலமாக எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவசர தேவைகளுக்காகத் தனிவிமானம்/ஹெலிக்ஹொப்டர் சேவைகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

(சி/551529)

EURO FLIGHT AND CARNO (PVT) LTD

NO.35, STATION ROAD, MOUNTLAVINIA,
TEL.: 011 4542190, 077 3846998 FAX: 011 4542360

NO.11, VIHARA LANE, COLOMBO - 06
TEL.: 0114969116

NO.22, WYMAN ROAD, NALLUR, JAFFNA.
TP/FAX: 021 222 3974, 011 498327


## ஏழாண்டு நினைவஞ்சலி

### அமரர் கோபாலபிள்ளை தினகரதாஸ்



தோற்றம்: 08.05.1984

மறைவு: 03.02.2001

அன்புச் சகோதரனே!
எம் வாழ்வின் தினகரனே- நீ
மறைந்ததால் சூழ்ந்த இருள் நீங்க
நிலவாகவேனும் ஒளி தரமாட்டியா?
பாசத்துடன் இருந்தவனே எம்மை
பரிதவிக்க விட்டதுமேன்
ஏழாண்டுகள் சென்றாலும் உன்
நினைவுகளுடன் வாழ்வதுடன்
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

'கிரான்',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (71281) குடும்பத்தினர்.


## இலங்கை மாணவர்கள் இந்தியாவில் தமது மேற்படிப்புக்களைத் தொடர்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

சேவாலங்கா மன்றத்தின் சேவாலங்கா முதுநிலைக் கல்வித் திட்டமானது இந்தியாவில் பெங்களூரில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் (ராஜீவ்காந்தி பல்கலைக்கழகம், விஸ்வேஸ்வராய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூர் பல்கலைக்கழகம்) மற்றும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரதியார், பெரியார் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும் சில கல்லூரிகளுடன் கூட்டாக சேர்ந்து மேற்படிப்புக்களைத் தொடர விரும்பும் இலங்கை மாணவர்களிடமிருந்து பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

### UNDERGRADUATE COURSES

B.C.A
B.Sc – Computer Science; Information Technology; Electronics & Communication; Mathematics; Physics; Chemistry; Bio Chemistry; Bio-Technology; Micro Biology; Statistics; Fashion & Apparel Design; Catering & Hotel Management
B.Sc Nursing
Bachelor of Pharmacy
Bachelor of Physiotherapy
B.B.A
B.B.M-Bank Management
B.Com
B.Com with Computer Application
B.Com-Electronic Banking
B.A Journalism; Psychology; English(CA); Tamil; Sociology
B.Ed

LL.B
BE(Electronics & Communication)
BE(Computer Science & Engineering)
BE(Electrical & Electronic Engineering)
BE(Information Science & Engineering)
BE(Mechanical Engineering)

### POSTGRADUATE COURSES

M.C.A
M.Sc – Computer Science; Electronics & Communication; Mathematics; Physics; Chemistry; Organic Chemistry; Applied Microbiology; Microbiology; Applied Genetics; Bio Chemistry; Bio-Informatics; Bio Technology; Food Processing; Apparel Technology & Management; Electronic Media; Electronic Science; Communication; Nursing;
M.Com (Computer Application)
M.Com
M.A – English, Tamil
MBA
M. Pharmacy
Master of Physiotherapy
Master of Tourism Administration
Master of Social Work

### DIPLOMA COURSES

Diploma in Electronics & Communication; Electrical & Electronics; Mechanical; Computer Science; Auto Mobile; Civil; Architecture; Information Technology; Hotel Management; Dental Mechanics; Dental Hygienist's X-Ray Technician's; Medical Lab Technician's; Pharmacy; Hospitality Management, General Nursing & Midwifery

விண்ணப்பப்படிவங்களையும் கற்கைநெறி சம்பந்தமான விபரக்கோவைகளையும் (கட்டண விபரம், தகமைகள்) ரூபா 750.00 ஐ செலுத்துவதன் மூலம் சேவாலங்கா மன்ற மாவட்ட காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 05.03.2008ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மாணவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

Sewa Lanka Tertiary Education Program
Sewa Lanka Foundation-District Office
250, Temple Road,
Nallur, Jaffna.
Tel: 021-222 9850

Head Office(Consultant)
Tel: 0602166334, 0602166335
Mobile: [illegible]
Fax: 011 2517061


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி க.தெய்வானைப்பிள்ளை 16.02.2008 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற V.K.கந்தையாவின் (ஓய்வு பெற்ற கல்வி திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.02.2008 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(சி/551544)

தகவல்:
ப.சங்கர்
(H.N.B முகாமையாளர், நெல்லியடி).
இ.க.ரேஸ்
(ஹரன் புடைவையகம்).

### கனகசபாபதிப்பிள்ளை கனகதாசன்

(முன்னாள் ஆசிரியர்)

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 314, பலாலி வீதி, கந்தர்மடத்தையும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய க.கனகதாசன் 19.02.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற 'றிஜீஸ்ரார்' பொன்னையாவின் பேரனும் கனசபாபதிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும் கனகசபாபதி- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்தவராணியின் (ராணி) அன்புக் கணவரும் ஆர்த்திகா, தர்மிகாவின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

314, பலாலி வீதி,
கந்தர்மடம்.
T.P.:021-4590395.

தகவல்:
த.தேவராசா (மாஸ்ரர்).
(71277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிக்கும் நாள்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறுகிறார்

கொழும்பு,பெப்.22

பயங்கரவாதச் செயற்பாடுகளை - பயங்கரவாதத் தலைமைத்துவத்தை - முறியடிக்கும் நாள்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்கு எமது இராணுவத்தின் துணிகரமான நடவடிக்கையே காரணம்- என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

இலங்கைக் கட்டடக் கலைஞர்களின் நிறுவனமான ஆர்க்கிடெக் அதன் 50ஆவது வருடப் பூர்த்தியை கொண்டாடும் முகமாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாபெரும் கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்துள்ளது. நேற்று இக்கண்காட்சியைப் பிரதம அதிதியான பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்டட கலைஞர்கள் ஒரு நாட்டுக்கு மிகவும் அவசியமானவர்களாகத் திகழ்கின்றனர். காரணம் ஒரு நாட்டின் அபிவிருத்தி, கட்டட நிர்மாணங்களிலும் அதன் கலைகளிலும் தங்கியுள்ள மன்னர்கள் காலத்திலும் இலங்கையில் பல்வேறு கட்டக் கலைகள் வளர்ந்து வந்திருப்பதை நாம் மறுக்க முடியாது. அந்த வழி வந்த இப்போதைய கலைஞர்கள் பாராட்டுதலுக்குரியவர்களே.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கட்டடக் கலையானது நகரத்தில் மட்டுமல்லாது கிராமப் புறங்களுக்கும் வியாபித்துள்ளமை குறித்து நாம் பெருமைப்படவேண்டும்.

அத்துடன் இந்த நாட்டில் பயங்கரவாதம் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அந்தப் பயங்கரவாதம் , கட்டட நிர்மாணப் பணிகளுக்கு இடையூறாக அமைகின்றபோதிலும் அதனை மீறியும் எமது நாட்டில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் அந்த நிர்மாணப் பணிகள் வெற்றி பெறுவதும் உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதத்தின் முடிவுக்கு நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வடக்குப் பகுதியில் பயங்கரவாதத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளை எமது துணிச்சல் மிக்க இராணுவ அணியினர் முறியடித்திருக்கின்றனர்.



மிக விரைவில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிடும். இதே வேளை,பயங்கரவாதத் தலைமைத்து வங்களும் அழிக்கப் பட்டு விடும்.

இதனைநிறைவேற்றுவதற்கான காலம் நிறைவேறி வருகின்றது. இதன்பின்னர் மக்கள் படும் துன்பங்களில் இருந்து விடுபடக்கூடியதாய் இருக்கும். அத்துடன் நாடு முழுவதும் சாதாரண நிலையும் தோற்றுவிக்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் கற்றுத்தேர்ந்த கட்டடக் கலைஞர்களான உங்களிடத்தில் எனது கருத்தைப் பரிமாறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலைஞன் இறந்துபோனாலும் அவனது கலை வாழ்ந்துகொண்டிருக்கும். கலைஞர்கள் எந்த நாட்டவர்களாக இருந்தாலும் கலைகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் - என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் கலந்துகொண்டனர். (202)

## சப்ரகமுவவின் புதிய ஆளுநர்

கொழும்பு,பெப்.22

சப்ரகமுவ மாகாண ஆளுநராக டிக்ஸன் டயல நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இவர், கண்டி, தலதா மாளிகையின் தியவதன நிலமேயான நிலங்க டயல பண்டாவின் தந்தையாரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாடசாலை நண்பரும் ஆவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் இன்று வெள்ளிக்கிழமை பதவியேற்பார் என தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் புதிய தபால் பெட்டி

நவாலி,பெப்.22

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தினரின் முயற்சியால் ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் அப்பகுதி மக்களின் நன்மை கருதி புதிய தபால் பெட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் தமது கடிதங்களை அனுப்புவதற்கு தூர இடங்களுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படாதென்று மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

(202-100)

## உடுவில் கலைஞர்களை கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

கலாபூஷணம் விருதுக்கு உடுவில் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், நாட்டுக்கூத்து, இலக்கியம், ஊடகத்துறை முதலான பல்வேறு துறைகளில் சிறப்பான சேவை ஆற்றியவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (202)




எச்.என்.பி. அசுரன்ஸ் நிறுவனத்தால் அண்மையில் ஒளிவிழா நிகழ்வு நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் அருட்தந்தை பிராஜன் உரையாற்றுவதையும் நகைச்சுவை நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (203)

# சிவில் பாதுகாப்புக் குழுவினரால் ஊடகவியலாளருக்குத் தொல்லை!

## சர்வதேச அமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு முறையீடு

கொழும்பு,பெப்.22

சிவில் பாதுகாப்புக் குழுவினரால் பத்திரிகையாளர்கள் துன்புறுத்தப்படுகின்றமை குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேராவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் நேற்றுமுன்தினம் பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பொலிஸ் மற்றும் சிவில். பாதுகாப்புக் குழுவினரால் பத்திரிகையாளர்கள் மீது பல தாக்குதல்களும் அவர்களது உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் இடம் பெற்றுள்ளன என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

### ஒரே நாளில் 3 சம்பவங்கள்

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் இது குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றது.

கடந்த மாதம் பத்திரிகையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கைது, துஷ்பிரயோகம் மற்றும் தாக்குதல் போன்ற மோசமான சம்பவங்கள் குறித்தும் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது. இதில் மூன்று சம்பவங்கள் ஒரே நாளில் இடம்பெற்றுள்ளன.

கருத்துச் சுதந்திரம், நடமாட்டச் சுதந்திரம் போன்ற ஊடக சுதந்திரங்களுடன் தொடர்பு டைய விடயங்களை எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் பாதிக்கக்கூடாதென சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஆசிய பசுவிக்கிற்கான இயக்குநர் ஜக்குலின் பார்க் தெரிவிக்கின்றார்.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களை இலங்கை அதிகாரிகள் விசாரிக்கத் தவறியுள்ளமையும், பத்திரிகையாளர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க மறுத்துள்ளமையும் அவர்கள் பத்திரிகையாளர்களின் உரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர் என்ற தகவல்களும் இலங்கை அரசின் கட்டமைப்புகளுக்குள் பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள்தப்பிக்கத்துணைபுரியும் கலாசாரம் நிலவுவதைப் புலப்படுத்துகின்றன.

பத்திரிகையாளர்களின் உரிமைகள் குறித்து சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்துமாறும் அவர்களது ஊடக அடையாள அட்டைகள் குறித்து தெளிவுபடுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடகப் பணியாளர்களினதும் பத்திரிகையாளர்களினதும் சட்டபூர்வ செயற்பாடுகளில் தலையிடவேண்டாமென சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கு ஆலோசனை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். - என்று உள்ளது. (சி)

## காரைநகரில் 3 வீதிகள் புனரமைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.22

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட மூன்று வீதிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்தமுறையில் ஜாதிக சவிய கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

அல்வின்வீதி, கல்வன்தாழ்வுவீதி, மருதபுரம் வீதி என்பவற்றுக்கு கற்கள் போட்டு தார் ஊற்றுவதற்கு 35 லட்சம் ரூபா மேற்படி திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக மக்கள் பாவனையில் காணப்பட்ட இவ்வீதிகள் உரிய முறையில் பராமரிப்பு செய்யப்படாமையால் நீண்டகாலமாக சேதமடைந்த நிலையிலேயே காணப்பட்டன.

குடாநாட்டுக்கு தார் கொண்டு வருவதில் காணப்படும் சிரமங்கள் காரணமாக இவ்வீதிகளுக்கு தார் ஊற்றும் பணிகள் மிக விரைவில் இரண்டாம் கட்டட வேலைத் திட்டமாக நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-68)

# வேட்பாளர்களுக்குப் புலிகளின் பெயரால் கொலைமிரட்டல்; 3 முஸ்லிம்கள் கைது!

## அச்சுறுத்தல் பிரசுரங்களும் காத்தான்குடியில் சிக்கினவாம்

மட்டக்களப்பு,பெப்.22

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குப் புலிகளின் பெயரினால் பிரசுரங்கள் மூலம் மிரட்டல்கள் விடுத்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று மூஸ்லிம்கள் காத்தான்குடிப் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடம் இருந்து வேட்பாளர்களுக்கு மிரட்டல்கள் விடும் வகையில் வாசகங்கள் அடங்கிய - அச்சிடப்பட்ட - பிரசுரங்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் (பிள்ளையான் குழு) வேட்பாளர்களுக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து கொலை அச்சுறுத்தல் மிரட்டல்கள் விடுக்கப்பட்டன எனப் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு உண்டா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளே பணம் செலுத்திக் குறிப்பிட்ட மிரட்டல் கடிதங்களைக் காத்தான்குடி அச்சகத்தில் அச்சிட்டுக் கொண்டனர் என்று கைதானோர் தரப்பில் கூறப்பட்டதாக அறியவந்தது. (சி)

# பிணையில் விடப்பட்டிருந்த மீனவர் நீர்கொழும்பில் சுட்டுக்கொலை

கொழும்பு,பெப்.22

நீர்கொழும்புப் பகுதியில் மீனவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் கடந்த செவ்வாயன்று இரவு 10.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நீர்கொழும்பு, குடாப்பாடு, ரோஸறி மாவத்தை என்ற இடத்தைச் சேர்ந்த டபிள்யூ. கிறிஸ்ட் பெர்னாண்டோ (வயது - 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

இரவு 10.30 மணியளவில் அவருடைய வீட்டிற்குவந்த இனந்தெரியாத சிலர் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக அவரை விசாரணை செய்யவேண்டும் என்று தெரிவித்தனர் எனக் கூறப்படுகின்றது.

தங்களைப் பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறிய அவர்கள் குறித்த நபரை வெளியில் அழைத்துச் சென்று அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் கூறப்பட்டது.

மீன்பிடித் தொழிலை தமது ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள இந்த நபர் கருவாடு விற்பனையிலும் ஈடுபட்டுள்ளார். மன்னார் பகுதியிலிருந்து மீன் வகைகளைக் கொண்டு வந்து கருவாடாக்கி விற்பதிலும் முன்னர் ஈடுபட்டு வந்தவர்.

பின்னர் அவர் ட்ரோலர் படகொன்றின் உரிமையாளராகும் அளவுக்கு தொழிலில் முன்னேற்றம் கண்டிருந்தார்.

### அண்மையில் விடுதலையானார்

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

சுமார் ஒருவருடகாலம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் அண்மையில் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் கைதுசெய்யப்பட்ட பின்னர் பிரதேசவாசிகளினால் அவருடைய வீடு சேதமாக்கப்பட்டதாக அவருடைய உறவினர்கள் தெரிவித்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமஞ்சொல்லுவோம்; நமனை வெல்லுவோம்

இப்பரந்த நிலவுலகின் கண்ணே மானுடப்பிறவி எடுத்திருக்கும் நாங்கள் அதன் மகிமையையும் மகத்துவத்தையும உணர்ந்து இதனை எமக்குத் தந்தருளிய எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் போற்றித் துதிக்க வேண்டும்.

இந்தச் சரீரத்தை ஆண்டவன் படைத்தது அவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். ஆகவே அவனது நாமத்தைச் சொல்லி நரகத்திலிடர்ப்படாமல் வாழத் தலைப்பட வேண்டும். சைவ சமய முழுமுதற்கடவுளான சிவபெருமானை ஐந்தெழுந்து மந்திரமாகிய 'நமசிவாய' என்று சொல்லி வணங்குதல் வேண்டும்.

சைவ நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் நாமும் வாழ்ந்து உய்வுபெற முயல வேண்டும். 'வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் நாமத்தைச் சதா உச்சரிக்க வேண்டும்.'

ஞானக்கதிர்

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம்' என்ற நாவுக்கரசர் 'ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்; இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்கின்றார்.

மானிடர்களே! கொஞ்சம் சிந்தியுங்கள்!! இப்போது நாம் அனுபவிக்கும் துன்பத்துக்கு யார் காரணம்? நாங்களே தான். ஒரு பந்தைச் சுவர்மீது விட்டெறிந்தால் அது நம்மிடமே திரும்பி வருமாப்போல நாம் செய்த வினையை நாம்தானே அனுபவிக்க வேண்டும். இதில் ஆச்சிரியம் இல்லையே!

பாகற்கொட்டை போட்டால் சுரைக்காய் மரம் முளைக்குமா? பாகல்தானே முளைக்கும்.

இதை மட்டும் சிந்திக்க இந்த மனிதர்கள் மறுக்கக் காரணம் என்ன? அறிவீனம் தான்.

எனவே இனியாவது நல்லதைச் சிந்தித்து நல்லதைச் செய்து நன்மைகள் விளைய நாம் காரணர்களாக இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

அதற்கு ஒரே வழி!

சிவபெருமானின் திவ்யநாமத்தை இடையறாது உச்சரிக்க உச்சரிக்க நமது பாவங்கள் குலைந்து நிலையான பேரின்ப வாழ்வில் திளைக்கலாம்.

- இராசையா ஸ்ரீதரன்

## இயேசுவே என் மீட்பர், என் இறைவன்

இன்று திருத்தூதர் பேதுருவின் திருநாளை திருச்சபை கொண்டாடுகின்றது.

''நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்'' என்று ஆண்டவர் இயேசுவின் மீது மனித குலம் முழுவதும் கொள்ளவேண்டிய விசுவாசத்தை எடுத்துரைத்தவர் இவரே. அதற்கு ஆண்டவர் இயேசு இவரைப் பாராட்டவும் திருவுள்ளம் கொண்டார், ''யோனாவின் மகனான சீமோனே, நீ பேறுபெற்றவன், ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்.'' என்றருளினார். எனது தனிப்பட்ட வாழ்வில் இயேசு எனக்கு யார்? அவர் எட்டாத உயரத்தில் இருக்கும் கடவுளின் மகன் மட்டும் தானா? அல்லது ஆபத்து வேளைகளில் கை கொடுக்கும் நண்பனா? ஒட்டி உறவாடும் சகோதரனா? அல்லது அறிந்து வழி நடத்தும் தந்தையா? அல்லது இயேசு எனது வாழ்வில் எல்லாவற்றுக்கும் மேலான இன்றியமையாத எல்லாமாக இருக்கின்ற ஒருவரா? இந்தத் தவக்காலத்தில் எனது வாழ்வை மாற்றியமைப்பதற்கு இயேசு எனக்கு யார்? என்ற கேள்வி தேவையான ஒன்றாகும்.

தவக்காலச் சிந்தனை

நாங்கள் ஆன்மீக ரீதியில், சமூதாய ரீதியில் வளர்வதற்கு, எம்மைப்பற்றிய சுய பரிசோதனை அவசியமான தொன்றாகும். எங்களைப் பற்றிய ஒரு சில விடயங்களை, மற்றவர்கள் சொல்வதன் மூலம்தான் நான் அறிந்து கொள்ளமுடியும். எனவே என்னைப்பற்றி நான் கொண்டிருக்கும் எண்ணம் என்ன? மற்றவர்களுக்கு எவ்வாறு நான் தோன்றுகிறேன்? என்பதை அறிந்து எனது வாழ்வை ஏற்புடையதாக மாற்றி அமைக்க முயற்சி எடுப்போம். இந்தத் தவக்காலத்தில் எம்மை ஆராய்ந்து பார்த்து இறைவனுக்கேற்ற முறையில் எமது வாழ்வை மாற்றியமைப் போம்.

- எச்.சீ.மரீனா.

## வாசகர் திருமுகம்

### எழுதிக்களைத்து விட்டேன்; ஓய்வூதியம் கிடைத்தபாடில்லை

நான் ஒரு பாதிக்கப்பட்ட புகையிரதத் திணைக்கள ஊழியன். 16.02.2006 ஆம் திகதி பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பெற்ற 04/2006 சுற்று நிருபத்தின் பிரகாரம் ஓய்வூதியம் பெற்றுக் கொள்வதற்காகக் கடந்த 22.03.2006 ஆம் திகதி முதல் சம்பந்தப்பட்ட சகல தரப்பு அமைச்சு அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரச அதிபர்கள் ஆகியோருக்கு விண்ணப்பித்து இன்றுவரை 23 மாத காலமாகியும் ஓய்வூதியம் கைக்கு வந்து சேரவில்லை.

எமது திணைக்களம் மத்திய அரசின் கீழ் இயங்குவதால் சகல காரியாலயத் தொடர்புகளுக்கும் கொழும்புடனேயே மேற்கொள்ளவேண்டி உள்ளது. இன்றுவரை முப்பதிற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலமும் சாதாரண தபால் மூலமும், தொலைபேசி மூலமும் அனுப்பியும் ஒருவரை ஒருவர் சாடுகிறார்கள்; தீர்க்கமான முடிவாகப் பதில் அனுப்புகிறார்களில்லை

இதனால் மனமுடைந்த பாதிக்கப்பட்ட ஊழியனாகிய நான் எனது நிலைமைகளைச் சரியான அத்தாட்சிகளுடன் விளக்கி மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு எனது சுயபாஷையாகிய தமிழ் மொழியில் இருபக்கங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றையும் அத்துடன் பொதுநிர்வாக அமைச்சின் ஓய்வூதியமும் வீடமைப்பிற்கும் பொதுவான சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி.என்.வீரக்கோனுக்கு 16.01.2008 இல் நான் அனுப்பிய கடிதத்தின் புகைப்படப்பிரதியும் அவர் தனது PH/PI/PROB/RELF/VAC என்ற கடிதத் தலைப்பில் 24.01.2008ஆம் திகதி பிராந்திய போக்குவரத்து அத்தியட்சகர், பி.போ.அ.காரியாலயம், புகையிரதத் திணைக்களம், அநுராதபுரம் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியுடன் இணைத்து 14.02.2008 ஆம் திகதி 1381 இலக்கப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்ததுடன், பிரதிகளைப் பின்வருவோருக்கும் அனுப்பி வைத்துள்ளேன்; அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக.

1. அமைச்சர், சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு.
2. செயலாளர், புகையிரத மற்றும் போக்குவரத்து அமைச்சு
3. சிரேட்ட உதவிச் செயலாளர் (ஓய்வூதியமும் வீடமைப்பும்) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
4. ஓய்வூதியப் பணிப்பாளர், ஓய்வூதியத் திணைக்களம்
5. பொதுமுகாமையாளர், புகையிரதத் திணைக்களம், தலைமைக் காரியாலயம்
6. பிராந்திய போக்குவரத்து அத்தியட்சகர், அநுராதபுரம்
7. தலைமைப் பொறியியலாளர் (மோற்றிப் பவர்) தெமட்டகொடை
8. அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் -

இதுவரை காலமும் நான் எழுதி எழுதிக் களைத்து விட்டேன். இனியாவதுசம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட ஊழியராகிய என் சார்பில் [illegible] களா? இல்லையேல் இன்னமும் அலைய் வைப்பார்களா?

- பாதிக்கப்பட்ட ஊழியன்: [illegible]

## நிகழ்வுகள்..., நிகழ்வுகள்...



நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவின்போது வினோத உடைப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் முன்னாள் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம். (203)



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் தொடர்ந்து 28 வருடங்களாக சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள கே.ரவிராஜனுக்கு நடத்தப்பட்ட சேவை நலன் பாராட்டுவிழாவின்போது கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் உரையாற்றுவதையும் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவதரன் மற்றும் விழாநாயகன் கே.ரவிராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (224)



நவாலி மகாவித்தியாலயத்திற்குப் புதிதாக நியமனம் பெற்ற அதிபர் இரா.வசந்தகுமாருக்கு மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத் தலைவர் அ.மு.அருணாசலம் தலைமையில் பாராட்டு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் சிறப்புரையாற்றுவதனையும் அதிபர் இரா.வசந்தகுமார், திருமதி மாலினி வசந்தகுமார் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: ரமேஷ்)*



பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கியினால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவிப்பொருள்களை வழங்குவதையும் பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ந.சுதீந்திரராசா சண்டிலிப்பாய் பிரதேச சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் எஸ்.குமாரவேல் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கைக் கிளர்ச்சி வேறு தமிழர்களின் போராட்டம் வேறு

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் டென்னிஸ் பெரேரா,தேசியப் பிணக்குக்குத் தீர்வு காண்பது தொடர்பாக வார மத்தி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

*''இந்தப் பிணக்குக்கு எவ்வாறு தீர்வு காணப்பட முடியும்?''* - என்று அவரிடம் கேட்கப்பட்டது.

*''போரினால் அல்ல. ஆனால் பேச்சுகள் மூலம்''* - என்று பதிலளித்த முன்னாள் இராணுவத் தளபதி அதை ஒட்டிய சில பட்டறிவுப் பாடங்களையும் முன்வைத்திருக்கின்றார்.

*''இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் உலகில் ஏறத்தாழ இருநூற்றி நாற்பது கிளர்ச்சிகள் இடம்பெற்று வந்துள்ளன.*

*''அவற்றில் மூன்றே மூன்று கிளர்ச்சிகள் மட்டுமே யுத்தம் மூலம் - எதிர்ப் போராட்டம் வாயிலாக - வெற்றிகரமாக அடக்கப்பட்டிருக்கின்றன.*

*''முதலாவது - மாலயாவில். அங்கு அவர்கள் கம்யூனிஸப் பயங்கரவாதிகளை அழித்தொழித்து மக்களை மீளக்குடியமர்த்தினார்கள்.*

*''அடுத்தது - குர்திஷ் கிளர்ச்சி. அது இராணுவ ரீதியில் அடக்கப்பட்டது.*

*''மூன்றாவது - இலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சி. அதுவும் இரண்டு தடவைகள் வெற்றிகரமாக இராணுவ ரீதியில் அடக்கப்பட்டது.*

*''ஏனைய எல்லாக் கிளர்ச்சிகளிலும் பதிலடியாக ஆயுத வழிமுறை சம்பந்தப்பட்ட அரசுகளினால் நாடப்பட்ட போதிலும் அதைத் தொடர்ந்து பேச்சுக்களே முன்னெடுக்கப்பட்டன.*

*''எதுவென்றாலும் அது அரசியல் தீர்வாகவே இருக்க வேண்டும். இராணுவம் தேவையானால் கிளர்ச்சியாளர்களை அதிக அளவில் அழிக்கலாம். அப்படிச் செய்தாலும் அந்தப் பிணக்குக்கு - பிரச்சினைக்கு - ஒரு மூலவேர் அல்லது மூலகாரணம் தொடர்ந்து இருந்தே தீரும். அந்த மூலகாரணம் களையப்பட வேண்டும். எங்களது விடயத்தில் மொழி மற்றும் ஆட்சியில் பங்கு ஆகிய இரண்டு விடயங்களே பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்த மூலகாரணங்கள்.''* - இப்படி முன்னாள் படைத்தளபதி எடுத்துரைத்திருக்கின்றார்.

அவரது கருத்தின் அர்த்தத்தை இலங்கையர்கள் சில சமயம் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும்.

உலகில் இடம்பெற்ற சுமார் இருநூற்றி நாற்பது கிளர்ச்சிகளில் மூன்று வெற்றிகரமாக ஆயுத முனையில் அடக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்றிருக்கிறது. அதுவும் ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் அத்தகைய கிளர்ச்சி இலங்கையில் வெற்றிகரமாக அடக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது என்பதையும் -

இலங்கையில் இதுவரை ஏற்பட்ட மூன்று கிளர்ச்சிகளில் இரண்டு வெற்றிகரமாக ஆயுத முனையில் - இராணுவ நடவடிக்கை வாயிலாக - அடக்கி, ஒடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் -

கவனத்தில் கொள்ளும் தென்னிலங்கையர், ஆகவே இலங்கையில் மூன்றாவது கிளர்ச்சியும் - ஈழத் தமிழரின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமும் - வெற்றிகரமாக அடக்கப்படக்கூடியது என்று கருதவோ - நம்பவோ - எண்ணவோ - கூடும்.

ஆனால், அவர்கள் அவ்வாறு கணக்குப் போடுவதில் அர்த்தமேயில்லை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அதைப் புரிந்து - உணர்ந்து - கொள்வதற்கு இலங்கையில் வெற்றிகரமாகத் தோற்கடிக்கப்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சிக்கும், தோற்கடிக்கப்பட முடியாமல் இருக்கும் ஈழத் தமிழர்களின் சுதந்திர விடுதலைப் போராட்டத்துக்கும் உள்ள பண்பியல்புகளை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டக் கிளர்ச்சி என்பது காலங்காலமாக அடக்கி, ஒடுக்கி, நசுக்கப்பட்ட, இனப்பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட ஓரின மக்களின் கௌரவ வாழ்வியலுக்கான உரிமையை வேண்டி நடத்தப்படும் ஒரு யாகம்.

ஆனால், ஜே.வி.பி. நடத்திய கிளர்ச்சி என்பது வேறு. அது அடக்குமுறைக்கு எதிரானதல்ல. ஆட்சி அதிகார ஆசை மீதான எழுச்சியின் விளைவாக இரத்தம் சிந்தும் களரியில் இறங்கிய கற்றுக்குட்டித்தனம் அது.

மார்க்ஸிஸ தீவிரவாத அமைப்பான ஜே.வி.பி. அந்தக் கிளர்ச்சியை முன்னெடுத்த சமயங்களில் அதனிடம் தெளிவான கொள்கையோ, தந்திரோபாயமோ இருக்கவில்லை. ஆயுதம் தரித்த புரட்சிகரப் போராட்டத்தை சரிவரப் புரிந்து கொள்ளாத ஜே.வி.பி., அதைச் செவ்வையாகத் திட்டமிடவுமில்லை. அதனிடம் அச்சமயம் ஓர் ஒழுங்குமுறையான ஆணைப் பீடத் தலைமையோ நெறிப்படுத்தும் நிர்வாகமோ அமைந்திருக்கவில்லை. குறைந்தபட்சம் நடைமுறைப் பட்டறிவு கூட அதற்குப் பொருந்தி வரவில்லை.

அந்தக் கிளர்ச்சியை முன்னெடுத்த ரோஹண விஜேவீர புரட்சிப் போராட்டத்தில் தேர்ச்சி பெற்றவரல்லர்.

மாவோவின் புரட்சிச் சிந்தனைகள், சேகுவேராவின் கெரில்லாப் போர்முறைக் குறிப்புகள் போன்றவற்றின் புத்தகப் படிப்பை வைத்துக்கொண்டு புரட்சி நடத்தும் அவரின் பேரவா அரைகுறையீல் தோற்றுப்போய்விட்டது.

வேலைவாய்ப்பு இழந்து விரக்தியுற்றுக் கிடந்த இளைஞர்களுக்கு அதிகார ஆசை காட்டி கிளர்ச்சி வழியில் தூண்டுவது வேறு.

பேரினவாதிகளால் அடிமைப்படுத்தப்பட்டு, வாழ்வியல் உரிமைகளை இழந்து, பாரம்பரிய தாயகத்தைத் தொலைத்து, நீதி, நியாயம் மறுக்கப்பட்டு, அஹிம்சை வழியிலான கோரிக்கைகள் ஆயுதப் பலாத்காரத்தினாலும் வன்முறையினாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில், விரக்தியின் விளிம்பில் வேறு மார்க்கமின்றி விடுதலைப் போராட்டப் பாதைக்குள் தள்ளப்பட்ட ஓரினத்தின் தேச விடுதலைப் புரட்சி என்பது வேறு.

இரண்டையும் ஒன்றாக நோக்கி, அதை அடக்கியமை போல இதை அடக்கலாம் என்று எண்ணுவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போலாகும்.

முன்னாள் இராணுவத் தளபதி கூறுவது போல இப்பிரச்சினையை அமைதி வழியில்தான் தீர்க்கலாம். ஆயுத அடக்குமுறை மூலம் அல்ல.

## சிறுகதைக்கான 'நாவேந்தன்' விருதுகளை ஞானசேகரன், சட்டநாதன் பெறுகின்றனர்

யாழ்ப்பாணம், பெப்.22

வருடந்தோறும் வெளிவரும் சிறந்த தமிழ்ச் சிறுகதைத் தொகுதிக்கு 'நாவேந்தன்' விருது வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு சிறுகதை நூல்களுக்கு விருது வழங்குவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இலக்கிய வட்டமும் கவிஞர் வீ.துரைசிங்கமும் இணைந்து இந்த விருதினை வழங்குகின்றார்கள்.

2005ஆம் ஆண்டுக்கென தி.ஞானசேகரன் எழுதிய 'ஞான சேகரனின் சிறுகதைகள்' என்ற நூலுக்கும் 2006 ஆம் ஆண்டுக்கென க.சட்டநாதனின் 'புதியவர்கள்' என்ற சிறுகதைத் தொகுதிக்கும் விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ்.இலக்கியவட்டம் தனது இலக்கிய முயற்சிகளைப் பரவலாக்கும் செயற்பாட்டின் ஓர் அம்சமாக 'நாவேந்தன் விருது' வழங்கும் திட்டத்தை 2005/2006ஆம் ஆண்டுகளிலிருந்து தொடங்கியிருப்பதாக இலக்கியவட்டத்தின் தலைவர் செங்கை ஆழியான் அறிவித்துள்ளார்.

ஈழத்தின் மூத்தோர் படைப்பாளரான த.திருநாவுக்கரசு நாவேந்தனின் பெயரில் இந்த விருது உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியராகவாழ்வைத் தொடக்கிய நாவேந்தன் அதிபராகவும், ஆற்றல்மிக்க எழுத்தாளராகவும் திகழ்ந்தார். அவரது 'வாழ்வு' என்ற சிறுகதைத் தொகுதிக்கு 1964ஆம் ஆண்டு சாகித்திய மண்டலபரிசுவழங்கப்பட்டது.இதை விட வேறுபல நூல்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டுக்கான த.நாவேந்தன் பரிசுபெறும் திரு.ஞானசேகரன் சிறுகதை, குறுநாவல், நாவல் என பல துறை இலக்கியப்படைப்புக்களில் ஈடுபட்டுள்ள மூத்த எழுத்தாளராவார் இவரது இரு நாவல்கள் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ளன.

2006 ஆம் ஆண்டுக்கான நாவேந்தன் விருதினை க.சட்டநாதனின் 'புதியவர்கள்' சிறுகதைத் தொகுதி பெறுகின்றது. ஈழத்தின் தரமான படைப்பாளிகளில் ஒருவராக சட்டநாதன் கணிக்கப்படுகிறார்.

(ப)

## பொதுச்சேவை ஆணைக் குழுவின் நேர்முகப் பரீட்சைகள்

கூட்டுறவுக் கல்லூரி அதிபர், சட்ட அலுவலர், உயிரியல் மருத்துவ அலுவலர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை வடக்குமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் எதிர்வரும் 4ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆணைக்குழு அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந் திய ஆணையாளர் தெரிவித்தார். (202)

## வலி.தென்மேற்கு மத்தியஸ்தர் சபையில் 210 பிணக்குகளுக்கு தீர்வு

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மத் தியஸ்த சபையில் 310 இற்கு மேற்பட்ட பிணக்குகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் 210 வழக்குகளுக்கு (பிரச்சினைகள்) சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளன என மத்தியஸ்த சபைத் தலைவர் கு.ஜெகநாதன் தெரிவித்தார்.

மிகுதியான 100 வழக்குகள் தீர்க்க முடியாது அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணி எல்லை, வழிவாய்க்கால், கடன் கொடுக்கல் வாங்கல், ஈடு, சொத்து ஏமாற்றம், மணமுறிவு, திருமணப் பிரிவு மற் றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 20 மத்தியஸ்தர்கள்முழுமையாக கடமையாற்றுகின்றனர்.

மத்தியஸ்த சபையை நாடுவோர் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 10 மணிக்கு 5 ரூபா முத்திரையுடன் தமது பிணக்கு விடயங்களை முன்வைக்கலாம் எனதலைவர் கு.ஜெகநாதன் தெரிவித்தார். இதேவேளை- குடாநாட்டில் புதிய 6 பிரதேச செயலகங்களில் மத்தியஸ்த சபைகள் விரைவில் உருவாக்கப்படவுள்ளன.

## நெற்செய்கையில் பாதிப்புற்ற புங்குடுதீவு, நயினாதீவு விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

புங்குடுதீவு மற்றும் நயினாதீவுப் பிரதேசங்களில் நெற்செய்கையில் ஏற்பட்ட அழிவிற்கு வேலணைப் பிரதேசசெயலர்உரியநிவாரணத்தைப்பெற்றுத் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் பொ.பத்மநாதன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

புங்குடுதீவில் 3 ஏக்கரும், நயினாதீவில் 6 ஏக்கருமாக மொத்தம் 9 ஏக்கரில் நெற் செய்கை அழிவடைந்து விவசாயிகள் பெரு நஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

மழைவீழ்ச்சி குறைந்ததினால் ஏற்பட்ட அழிவிற்கு விவசாயிகளுக்கு வேலணை பிரதேச செயலர் உதவ[illegible]ன் வரவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை - மண்கும்பான் பகுதியில் 13.5 ஏக்கரும், வேலணை வடகிழக்கில் 15 ஏக்கருமாக மொத்தம் 28.5 ஏக்கர் நெற்செய்கை எரிந்துள்ளது என வேலணை விவசாய போதனாசிரியர் எஸ்.இராமநாதன் தெரிவித்தார்.

## ஆவண உதவியாளர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

ஆவண உதவியாளர்வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இந்தப் பதவிக்கான பரீட்சை நடைபெற்றது. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு முடிவுகள் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்கவினால் கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்டன.

பாடரீதியான புள்ளிகள் குறிப்பிடப் பட்டுள்ளன. ஆனால் நிலை, நியமனத் திற்கு தகுதிபெற்றுள்ளமை தொடர்பான விவரங்கள் தெளிவுபடுத்தப்பட வில்லை என்று பரீட்சார்த்திகள் தெரிவித்துள்ளனர்.

பாடரீதியாக 50 புள்ளிகளுக்கு மேலாக மொத்தப்புள்ளி 132 பெற்றவர்களுக்கும் கூட குறிப்பு தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். (202-302)

## சுதுமலை வடக்கிலுள்ள 5 பொதுகிணறுகளை புனரமைத்துத் தருமாறு சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.22

சுதுமலை வடக்கில் உள்ள 5 பாழடைந் த பொதுக்கிணறுகள் மீள்புனரமைப்பு செய்யப்பட வேண்டுமென சுதுமலை வடக்கு விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கென மீள்புனரமைப்புக்கான திட் ட முன்மொழிவுகளை வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஊடாக ஜிரிஇசற் தொண்டு நிறுவனத்திற்கு வழங்கவுள்ளதாக சம்மேளனத் தின் தலைவர் ஆர்.குமரகுலசிங்கம் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி 5 பொதுக்கிணறுகளும் பொது மக்கள் பாவிக்க முடியாத அளவிற்கு பாழடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (202 - 95)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

பருத்தித்துறை,பெப்.22

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத் தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளிகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கும், கிளினிக்குகளுக்கும் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களுக்கு மருந்து வகைகள் இன்மையால் வெளிக்கடைகளில் மருந்துகளை வாங்குமாறு டாக்டர்கள் துண்டு எழுதிக் கொடுத்து வருகின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகளை வழங்குமாறு இப்பகுதி நோயாளர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளரையும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையையும் அவசரமாகக் கேட்டுள்ளனர். (202-218)

## அரசாங்க திணைக்கள ஊழியர்களுக்கு கலை, இலக்கிய துறைகளில் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22

அரச திணைக்களங்களின் அலுவலர்கள் கலை - இலக்கிய துறைகளில் ஊக்கிவிக்கப்படவுள்ளனர்.

நாடளாவியரீதியில் இச் செயற் திட்டத்தை முன்னெடுக்க கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.பெரேரா ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் - 2008 போட்டி நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் சிறுகதை, பாடல்கள், கவிதைகள் மற்றும் குறுநாடகங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

இப்போட்டி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்பட்டு ஊழியர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் 353 பிரதேசசெயலகங்கள், 340 உள்ளூராட்சி அமைப்புக்கள் உட்பட 771 அரசுசேவை நிறுவனங்கள் இவ் வருடப்போட்டியில் பங்குபற்றவுள்ளன.

போட்டிகளில் ஆர்வமுள்ள அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் 30.04.2008ற்கு முன்னர் -

அதற்கென உரிய படிவத்தின் ஊடாக 'செயலாளர், கலாசார அலுவல்கள் அமைச்சு, எட்டாம் மாடி, செத்ஸ்ரீபாய, பத்திரமுல்ல' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருபோட்டியிலும் முதல்3இடங்களை பெறும் அலுவலர்களுக்கு பணப் பரிசில்களும், தராதரப் பத்திரங்களும் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களை கலாசார மேம்பாட்டு அலுவலர் திருமதி சுபாசினி தேசவனிடம் 01-2862679/ 011-2872001-29 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். (202-95)

## நெல்லியடி அச்சுவேலிப் பிரதேசங்களிலும் விரைவில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள்

பருத்தித்துறை, பெப்.22

வடமராட்சியில் நெல்லியடியிலும், வலிகாமத்தில் அச்சுவேலியிலும் இரு தேசியசேமிப்பு வங்கிக் கிளைகள் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைத் தேசிய சேமிப்பு வங்கித் தலைமையகம் மேற்கொண்டுள்ளதாக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கிக்கிளைகள் இயங்கிவருகின்றன என்பதும் திறந்து வைக்கப்படவுள்ள வங்கிக்கிளைகள் யாழ்.மாவட்டத்தின் 7 ஆம், 8ஆம் கிளைகளாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(202-218)

### நாளை

மாசி - 11 23.02.2008
சனிக்கிழமை
திதி : துதியை
மு.ப. 09.59 வரை
நட்சத்திரம் : உத்தரம்
மு.ப. 09.30 வரை
[illegible] 03.30 - 05.00
[illegible] 09.30 - 11.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லுமா இலங்கை அணி? இன்று ஆஸியுடன் மோதல்!

மெல்போர்ண், பெப்.22

முத்தரப்புத் தொடரின் 9ஆவது போட்டியில் இன்று இலங்கை அணி, ஆஸ்திரேலியா அணியை எதிர்கொள்ளவுள்ளது. மீதமுள்ள மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்றால் மாத்திரமே இறுதியாட்ட வாய்ப்பைப் பெறமுடியும் என்பதால் கட்டாய வெற்றி என்ற நிலையில் இலங்கை அணி இன்று களம் காண்கின்றது.

ஆஸ்திரேலியா, இலங்கை, இந்தியா அணிகள் பங்கேற்கும் கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகின்றது. நடந்து முடிந்த 8 போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா 17 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இந்தியா 12 புள்ளிகளுடன் 2ஆம் இடத்திலும், இலங்கை 6 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் உள்ளன.

தொடரின் இறுதியாட்டத்திற்கு ஆஸ்திரேலியா முன்னேறுவது ஓரளவு உறுதியாகிவிட்டது. இந்தியா, இலங்கை அணிகளுக்கிடையில்தான் இறுதியாட்டத்திற்கு நுழைவது தொடர்பில் போட்டி உருவாகியுள்ளது.

இந்நிலையில் இன்று ஆஸ்திரேலியாவுடன் இலங்கை அணி மெல்போர்ணில் களம்காண்கின்றது. ஆஸ்திரேலிய அணியை கடந்த ஆட்டத்தில் குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினாலும் துடுப்பாட்டத்தில் கோட்டைவிட்டமையால் தோல்வியைச் சந்திக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அணி தள்ளப்பட்டிருந்தது. துடுப்பாட்டம், பந்துவீச்சில் அபார திறமையை வெளிப்படுத்தினால் மட்டுமே ஆஸ்திரேலிய அணிக்கு நெருக்கடி கொடுக்கலாம். சங்ககார பொறுப்புணர்ந்து ஆடுவது போல் மற்றைய துடுப்பாட்ட வீரர்களும் தங்களது பணியைச் சரிவரச் செய்ய வேண்டும். இல்லாவிடின் இறுதியாட்ட வாய்ப்பைக் கோட்டைவிட வேண்டியிருக்கும்.

இன்றைய போட்டி பகலிரவு ஆட்டமாக நடைபெறுகின்றது. இலங்கை நேரப்படி காலை 8.45 மணியளவில் ஆரம்பமாகின்றது.

## இலங்கை, இந்திய அணியினருக்கு அபராதம்

டுபாய், பெப்.22

ஆஸ்திரேலியாவில் நடந்துவரும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை அடிலெய்டில் நடந்த 8ஆவது ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் கடைசி ஓவரில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இரண்டு அணிகளும் பந்து வீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டது தெரிய வந்துள்ளது.

இந்தியா ஒரு ஓவரும், இலங்கை 2 ஓவரும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வீசி முடிக்கவில்லை. இதையடுத்து இந்திய அணித்தலைவர் டோனிக்கு 10 சதவீதமும், சக வீரர்களுக்கு 5 சதவீதமும் போட்டிக் கட்டணத்தில் இருந்து அபராதமாக விதிக்கப்பட்டிருப்பதாக ஐ.சி.சி. போட்டி நடுவர் ஜெப் குரோவ் நேற்றுமுன்தினம் அறிவித்தார். இதேபோல் இலங்கை அணித்தலைவர் ஜெயவர்த்தனவுக்கு 20 சதவீதமும், சக வீரர்களுக்கு 10 சதவீதமும் போட்டிக் கட்டணத்தில் இருந்து அபராதமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

## இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# 47 ஓட்டங்களுக்குள் சுருண்டது மலேஷியா 8 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து வெற்றி

கோலாலம்பூர், பெப்.22

19 வயதுக்கு உட்பட்வர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்துக்கு எதிராக நேற்று நடந்த லீக் போட்டியொன்றில் மலேஷியா அணி வெறும் 47 ஓட்டங்களுக்குள் சுருண்டு 8 விக்கெட்டுகளால் தோல்வியைத் தழுவியது.

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் நடந்துவருகிறது. இந்தப் போட்டியில் மொத்தம்16 அணிகள் பங்கேற்றுள்ளன.

இந்தப் போட்டியின் 5ஆவது நாளான நேற்று நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான ஆட்டமொன்றில் நியூஸிலாந்து, மலேஷிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. நியூஸிலாந்தின் ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர்கள் அபாரமாகப் பந்துவீச தொடக்கத்திலிருந்தே மலேஷிய அணி ஆட்டம் கண்டது. ஆரம்பவீரர்கள் இருவரும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். அடுத்தடுத்து வந்த வீரர்களும் குறைந்த ஓட்டஎண்ணிக்கையில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

மலேஷிய அணியின் வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டஎண்ணிக்கையைத் தொடவில்லை. ஐந்து வீரர்கள் ஓட்டக் கணக்கை ஆரம்பிக்காமலேயே ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக பைசல் அபு ஹசன் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இறுதியில் மலேஷிய அணி 17.1 ஓவர்களில் 47 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. நியூஸிலாந்து அணியின் ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர்கள் இருவரும் மலேஷிய அணியின் கதையை முடித்தனர். அபாரமாகப் பந்துவீசிய ரென்ற் பௌல்ற் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளையும், ரிம் சௌத்தி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணி 11.1ஆவது ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவுசெய்தது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 'டி' பிரிவு போட்டியில் பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 43.4 ஓவர்களில் 123 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பங்களாதேஷ் அணி 22.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

'பி' பிரிவு ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும், பப்புவா நியூ கினியா அணியும் மோதின. முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 49.4 ஓவர்களில் 319 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. ஜேக்கப்ஸ் சதமடித்தார். பப்புவா நியூ கினியா அணி 37.1 ஓவர்களில் 143 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் நடந்த 'ஏ' பிரிவு போட்டியில் மலேஷியாவும், சிம்பாப்வே அணிகள் மோதின. மலேஷியா 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 194 ஓட்டங்களை எடுத்தது. சிம்பாப்வே 38.4 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதன் மூலம் மலேஷியா 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது.



தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமாகின்றது. இதற்காக கடின பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் அப்ரப் அஹமட்.

## விளையாட்டு அரங்குகளில்

# ஐ.பி.எல். தொடருக்காக வீரர்கள் சுமார் 375 கோடி ரூபா வரை ஏலம்

மும்பை, பெப்.22

இந்தியக் கிரிக்கெட் சபையின் இந்திய பிறீமியர் லீக் அமைப்பில் (ஐ.பி.எல்.) இணைந்து விளையாடுவதற்காக சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் 75 பேர் சுமார் 375 கோடி ரூபாவரை ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ருவென்ரி/20 போட்டிகளில் விளையாடுவார்கள்.

இந்த 75 வீரர்களும் மும்பை, பெங்களூர், ஹைதராபாத், சென்னை, புதுடில்லி, மொகாலி, கொல்கத்தா, ஜெய்ப்பூர் ஆகிய 8 நகரங்களைக் கொண்ட அணிகளாக பிரிக்கப்பட்டனர்.

இந்த அணிகளை முகேஷ் அம்பானி, விஜய் மல்லையா போன்ற கோடீஸ்வரர்களும், ஹிந்தி நடிகர் ஷாருக்கான், நடிகை பிரீத்தி ஜிந்தா போன்றவர்களும் போட்டி போட்டு விலைக்கு வாங்கினார்கள். இதனால் இந்தியக் கிரிக்கெட் மேலும் சூடுபிடித்தது. சென்னை அணியை இந்தியா சிமெண்ட்ஸ் வாங்கியது.

அணிகளை விற்பனை செய்ததன் மூலம் 3 ஆயிரம் கோடி ரூபா வருமானம் இந்தியன் பிறீமியர் லீக்கிற்கு கிடைத்தது. இது தவிர ஒளிபரப்பு உரிமையை விற்பனை செய்ததன் மூலம் மேலும் 4 ஆயிரம் கோடி ரூபா இந்திய பிறீமியர் லீக்கிற்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்திரை பெற்ற வீரர்களாக அறிவிக்கப்பட்ட டெண்டுல்கர் (மும்பை), கங்குலி (கொல்கத்தா), யுவராஜ் சிங் (மொகாலி), ராகுல் டிராவிட் (பெங்களூர்), விரேந்திர ஷேவாக் (புதுடில்லி) ஆகிய 5 பேர் தவிர, தாங்கள் ஒப்பந்தம் செய்த மற்றைய வீரர்களை இந்திய பிறீமியர் லீக் மும்பையில் நேற்று முன்தினம் ஏலத்தில் விட்டது.

ஏற்கனவே அதிக தொகைக்கு அணிகள் ஏலத்துக்கு போயிருந்ததால் வீரர்கள் எவ்வளவு பணத்துக்கு ஏலம் போவார்கள் என்ற எதிர்பார்ப்பு நாடு முழுவதும் இருந்தது. பரபரப்பான இந்த நிலையில் 8 அணிகளின் வீரர்களும் ஏலத்தில் விடப்பட்டனர். 75 வீரர்களும் சுமார் 75 கோடி ரூபாவுக்கு ஏலம் போனார்கள்.

இதில், இந்திய அணியின் ஒருநாள் போட்டித் தொடருக்கான அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி, அதிகபட்சமாக 16 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டார். அவரை சென்னை அணி இந்தத் தொகைக்கு ஏலத்தில் எடுத்தது. இவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவரான அன்ட்ரூ சைமண்ஸ் அதிக தொகைக்கு ஏலம் போனார். அவரை சுமார் 15 கோடி ரூபாவுக்கு ஹைதராபாத் அணி ஏலத்தில் எடுத்தது. 3ஆவது அதிகபட்ச தொகை இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஜெயசூரியாவின் மீது நிர்ணயிக்கப்பட்டது. அவரை மும்பை அணியினர் சுமார் 11 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தனர்.

ஏலத்தில் எடுக்கப்பட்ட 75 வீரர்களையும், டெண்டுல்கர், கங்குலி, யுவராஜ் சிங், ராகுல் டிராவிட், வீரேந்திர ஷேவாக் ஆகியோரையும் கொண்டு இந்திய பிறீமியர் லீக் இந்த ஆண்டு 59 போட்டிகளை நடத்தத் திட்டமிட்டு இருக்கிறது. மொத்தம் 44 நாட்கள் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி தொடங்கி ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நடக்க இருக்கின்றன.

# துடுப்பாட்டத்தில் அக்கறை செலுத்தினால் முத்தரப்புத் தொடரை இந்தியா வெல்லலாம்

## ரவி சாஸ்திரி அறிவுரை

மும்பை, பெப்.22

துடுப்பாட்டத்தில் கூடிய அக்கறை செலுத்தினால் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் முத்தரப்புத் தொடரை இந்திய அணி வெல்லலாம் என அந்த அணியின் முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''முன்னைய போட்டிகளில் சோபிக்காத யுவராஜ், இலங்கைக்கு எதிரான போட்டியில் மிக நேர்த்தியாக ஆடி சாதித்து காட்டினார். இலங்கை பந்துவீச்சாளர்களை சமாளித்த விதமும் ஜெயசூரியா பந்தில் சிக்ஸர் விளாசியதும் துல்லியமாக அமைந்திருந்தது. அணிக்கு நம்பிக்கை தரும் வகையில் யுவராஜ் அசத்தினார். தொடரில் டோனி ஜொலித்து வருகிறார். ஒரு பவுண்டரி கூட அடிக்காமல் நிதானமாக ஓட்டங்களைக் குவித்த இவரின் பங்கு சிறப்பானது. பின்வரிசையில் பதான் துடுப்பாட்டத்தில் பலமான அடித்தளம் தரக்கூடியவர். இது போன்ற போட்டிகள் நல்ல பாடமாக அமையும். யுவராஜ் தனது பழைய நிலையை மீட்டுள்ளது நல்ல அறிகுறி.

''இலங்கை அணி தனது ஆரம்ப இரண்டு விக்கெட்டுகளை சீக்கிரம் இழந்தபோதிலும் சங்ககரா, ஜெயவர்த்தனா ஒத்துழைத்து ஆடினர். இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பதற்றமில்லாமல் திறமையை காட்டியதால் சவால் தந்தனர். பிரவீண் நன்றாக பந்துவீசினார். இந்திய பந்துவீச்சு திருப்தியளித்தது. துடுப்பாட்டத்தில் அதிக அக்கறை செலுத்தினால் தொடரை வெல்ல சிக்கல் இருக்காது.''

- என்று கூறினார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான போட்டி குறித்துக் கருத்துக் கூறிய இந்திய அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ச்ரேகர்,

''அற்புதமான போட்டி அது. இந்திய அணியில் தான் தவிர்க்க முடியாத வீரர் என்பதை யுவராஜ் நிரூபித்தார். அவர் அடித்த 76 ஓட்டங்கள்தான் அணியை வெற்றியை நோக்கி இழுத்து செல்ல டோனிக்கு உதவின. ஒற்றை ஆளாக போராடி தன் அணி போதுமான ஓட்டஎண்ணிக்கையை எட்ட சங்ககரா உதவினார். இந்தியா 99 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த போது இலங்கைதான் ஜெயிக்கும் என்று நினைத்தேன். ஆனால் யுவராஜும், டோனியும் சேர்ந்து அதைப் பொய்யாக்கினர். யுவராஜை வீழ்த்த ஜெயவர்த்தனா பயன்படுத்திய வியூகங்கள் தவிடுபொடியாயின. டோனி எப்போதுமே எனக்கு வியப்பைத் தரும் வீரர். அவர் 3 ஆண்டுகளாகத் தான் விளையாடுகிறார் என்பது ஆச்சரியமாய் இருக்கிறது. 10 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த வீரர் போல் முதிர்ச்சியுடன் விளையாடினார்.'' - என்று கூறினார்.

# கட்டார் பகிரங்க டெனிஸ் 3ஆம் சுற்றில் ஷரபோவா

டோகா, பெப்.22

டெனிஸ் உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, கட்டார் பகிரங்க டெனிஸ் தொடரின் 3ஆம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

டபிள்யூ.ரி.ஏ. அந்தஸ்துப் பெற்ற கட்டார் பகிரங்க டெனிஸ் போட்டி டோகாவில் நடைபெற்றுவருகின்றது. இந்தப் போட்டியில் முன்னணி வீராங்கனைகளுக்கு நேரடியாகவே 2ஆம் சுற்றில் விளையாட வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் நடந்த 2ஆம் சுற்று ஆட்டமொன்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சக வீராங்கனையான கலினா வொஸ்கோபோவாவை எதிர்த்தாடினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் சிறப்பாக ஆடிய ஷரபோவா, அதனை 6:4 எனும் கணக்கில் கைப்பற்றினார். எனினும், 2ஆவது செற்றில் சுதாகரித்து ஆடிய கலினா அதனை 6:4 எனும் கணக்கில் தனதாக்க ஆட்டம் சூடுபிடித்தது. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் அதிரடியாக ஆடிய ஷரபோவா 6:1 எனும் கணக்கில் இந்த செற்றைக் கைப்பற்றி வெற்றியைப் பதிவுசெய்தார். இந்த வெற்றியின் மூலம் அவர் 3ஆம் சுற்று வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டை இழந்து பூமி நோக்கி வந்துகொண்டிருந்த

# செயற்கைக்கோள் தாக்கித் தகர்ப்பு!

## அமெரிக்காவின் ஏவுகணை பதம் பார்த்தது



உளவு செயற்கைக் கோளை தாக்கிய அழிப்பதற்கான அமெரிக்க கடற்படைக் கப்பலிலிருந்து சீறிச்செல்லும் ஏவுகணை

வாஷிங்டன், பெப். 22

பூமி மீது விழுந்து தேசத்தை ஏற்படுத்தலாம் என அச்சுறுத்திக் கொண்டிருந்த உளவு செயற்கைக் கோளை அமெரிக்க கடற்படை நேற்று ஏவுகணையைச் செலுத்தி வெற்றிகரமாக தாக்கி அழித்தது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விண்வெளியில் பல்வேறு செயற்கைக்கோள்களை செலுத்தி வருகின்றன. இவற்றில் உளவு செயற்கைக் கோள்களும் அடங்கும். 2006ஆம் ஆண்டு அமெரிக்கா 2268 கிலோ எடை கொண்ட உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது. ஆனால், சிறிது காலத்திற்குள் இந்தச் செயற்கைக்கோள் செயலிழந்து போனது. அதன் கணினி பாதிக்கப்பட்டு இந்த செயற்கைக்கோள் இறந்துபோனதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையே இந்தச் செயற்கைக்கோள் பூமியை நோக்கி வரலாம் என்றும் பூமி மோதுவதால் அதன் எரிபொரும் தாங்கியிலிருக்கும் விஷ வாயு மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் திடுக்கிடும் தகவல் வெளியிடப்பட்டது. மார்ச் மாதமளவில் இந்தச் செயற்கைக்கோள் பூமியைத் தாக்கி சேதத்தை ஏற்படுத்தலாம் எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து அமெரிக்கா இந்தச் செயற்கைக்கோளை தற்காப்பு நடவடிக்கையாக ஏவுகணையை செலுத்தி விண்ணிலேயே தகர்க்கத் தீர்மானித்தது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு அமெரிக்க நேரப்படி 10.30 மணியளவில் (இலங்கை நேரப்படி நேற்றுக் காலை) இந்தச் செயற்கைக் கோள் வெற்றிகரமாக ஏவுகணை மூலம் தகர்க்கப்பட்டது. பசுபிக் பெருங்கடல் பகுதியிலிருந்து அமெரிக்கக் கடற்படைக் கப்பல் இந்த ஏவுகணையைச் செலுத்தியது.

ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய ஏவுகணை துல்லியமாக இந்தச் செயற்கைக் கோளைத் தாக்கி அழித்தது. முன்னதாக இந்தச் செயற்கைக்கோள் தாக்கப்படும்போது அதன் மிச்சங்கள் ஆஸ்திரேலியாவில் விழ வாய்ப்பு இருப்பதாக அந்நாட்டுக்கு எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதனை முன்னிட்டு அந்நாட்டில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தச் செயற்கைக்கோளில் நச்சுப்பொருட்கள் இருக்கின்றன. ஏவுகணையால் தகர்க்கப்பட்டதில் நச்சுப் பொருட்கள் என்னவாயிற்று என்பது விரைவில் தெரியவரும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 'கோமா'விலிருந்து மீண்டார் கிழக்குத் திமோர் ஜனாதிபதி

டிலி, பெப்.22

கிழக்குத் திமோர் தலைநகரான டிலியில், தீவிரவாதிகளால் சுடப்பட்ட ஜனாதிபதி ஜோஸ் ரெமோஸ் ஹோட்டா, 'கோமா' நிலையிலிருந்து விடுபட்டுள்ளார் என அவரது பேச்சாளரான லூக் கொஸ்லங் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆஸ்திரேலியா ரோயல் டவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவரது உடல் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. மயக்க(கோமா) நிலையிலிருந்து விடுபட்டுள்ள அவர், தம் குடும்ப அங்கத்தவர்களுடன் பேசியுள்ளார் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி தமது வாசஸ்தலத்தில், தீவிரவாத இராணுவ வீரர்களால் வயிற்றிலும் நெஞ்சிலும் சுடப்பட்ட ஜனாதிபதி மருத்துவ சிகிச்சைக்காக, வட ஆஸ்திரேலியாவிலுள்ள மருத்துவமனைக்கு, விமானம் மூலம் கொண்டுவரப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

## சேர்பியாவிலிருந்து தூதரை திரும்பப் பெற மாட்டோம்

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 22

சேர்பியாவில் இருந்து கொசோவா தனிநாடாக சுதந்திரம் அடைந்ததாக பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து அந்தப் புதிய நாட்டை அமெரிக்கா அங்கீகரித்தது. இதனால் கோபமடைந்த சேர்பியா அமெரிக்காவுக்கான தன் நாட்டுத் தூதரை திரும்பப்பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சேர்பியாவுக்கான அமெரிக்கத் தூதரை அந்நாட்டு அரசு திரும்ப அழைக்குமா என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரிகளை செய்தியாளர்கள் கேட்டனர்.

இதற்கு வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் பதில் அளிக்கையில்,

''சேர்பியாவில் அமெரிக்கத் தூதர், அவர் வேலையை சரியாகத்தான் செய்துவருகிறார். அதனால் அவர் அந்த நாட்டில் தொடர்ந்து இருப்பார்.'' - என்று கூறினார்கள்.

சேர்பிய அரசு அமெரிக்கத் தூதரகத்துக்கு பாதுகாப்புக் கொடுத்து வருகிறது. சேர்பிய மக்களின் போராட்டம் காரணமாக அமெரிக்கத் தூதரகம் இப்போது மூடப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொசோவோவின் உதாரணத்தைப் பின்பற்றி பலஸ்தீனம் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்யவேண்டும்

### பலஸ்தீன மூத்த அதிகாரி வேண்டுகோள்

மேற்குக்கரை, பெப்.22

இஸ்ரேலுடனான சமாதான முயற்சிகள் தோற்கும் பட்சத்தில் கொசோவோவின் உதாரணத்தை பின்பற்றி பாலஸ்தீனம் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனத்தை அறிவிக்க வேண்டுமென மூத்த அதிகாரியொருவர் கருத்துத் தெரிவித்துள்ள அதேவேளை பலஸ்தீன ஜனாதிபதி இதனை நிராகரித்துள்ளார்.

பலஸ்தீனத்தின் சமாதான பேச்சுப் பிரதிநிதியும் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் ஆலோசகருமான யசீர் அபெட்ரடோ பேச்சுகளால் எவ்வித பலாபலனும் ஏற்படவில்லை என பேட்டியொன்றில் தெரிவித்துள்ளதுடன் மேற்படி கோரிக்கையையும் விடுத்துள்ளார்.

பலஸ்தீனத்திற்கு இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன. ஒன்று பேச்சுகள் வெற்றி பெறுவது, இது நடைபெறாவிட்டால் மற்றுமொரு வழியுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர் கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

முழு உலகமும் சுதந்திரக் கொசோவோவை அரவணைத்துள்ளதென்றால் பலஸ்தீன விடயத்தில் இது ஏன் இடம்பெறக்கூடாது என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பலஸ்தீன தலைமை யோசனையொன்றை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், பலஸ்தீன ஜனாதிபதி இவ்வருட இறுதிக்குள் பேச்சு மூலமான தீர்வைக் காண்பது குறித்து உறுதியாகவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இது சாத்தியப்படாவிட்டால் பொருத்தமான முடிவுகுறித்து சிந்திக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பலஸ்தீனத்தின் தலைமை சமாதான பேச்சாளர் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடன யோசனையை உடனடியாக நிராகரித்துள்ளார். பலஸ்தீனத் தலைமை இது குறித்து ஆராயவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுடன் தீவிர பேச்சுகள் இடம்பெறுகின்றபோதிலும் முன்னேற்றம் ஏற்படவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் கொசோவோ நிலைமை வித்தியாசமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீனியர்கள் 1988இலேயே சுதந்திரப் பிரகடனம் செய்தபோதிலும், அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் நிலப்பகுதியெதுவும் இல்லாததால் சர்வதேச சமூகம் அவர்களை அங்கீகரிக்கவில்லை.

## ஆப்கானிஸ்தானுக்கு வரும் பாக். அகதிகள் அதிகரிப்பு

வாஷிங்டன், பெப். 22

ஆப்கானிஸ்தானில் இருந்து அகதிகள் பாகிஸ்தானில் குடியேறி வந்த காலம் மாறி, இப்போது பாகிஸ்தானில் இருந்து அகதிகள் ஆப்கானிஸ்தானில் குடியேறி வருகிறார்கள் என்று அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது. அவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாகிஸ்தான் அகதிகள் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து கோஸ்ட், பக்தியா ஆகிய மாநிலங்களில் குடியேறி உள்ளனர் என்று அமெரிக்க இராணுவ கேணல் ஜெப்ரி ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானில் அதிகரித்து வரும் தீவிரவாதக் தாக்குதல்களால் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து இருப்பதாகக் கருதும் பாகிஸ்தானியர்கள் ஆப்கானிஸ்தானில் குடியேறி உள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

## பாதுகாப்பாகத் தரையிறங்கியது அட்லாண்டிஸ் விண்வெளி ஓடம்

புளோரிடா, பெப்.22

சர்வதேச விண்வெளி மையத்துக்கான 13ஆம் நாள் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாதுகாப்பாகத் தரையிறங்கியது அமெரிக்காவின் அட்லாண்டிஸ் விண்வெளி ஓடம்.

விண்வெளி ஓடம் 7 விண்வெளி வீரர்களுடன் புளோரிடாவில் தரையிறங்கியது. விண்வெளிக்குச் செல்லும்போது ஐரோப்பாவின் முதல் விண்வெளி ஆய்வகத்தை அங்கு நிலைநிறுத்தவதற்காக அட்லாண்டிஸ் சுமந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.




## 9ஆவது தடவை டத்தோ சாமிவேலு மலேஷியப் பொதுத்தேர்தலில் போட்டி

கோலாலம்பூர், பெப். 22

மலேஷிய இந்தியக் காங்கிரஸ் தலைவரான டத்தோ சாமிவேலு, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 9ஆவது முறையாக போட்டியிடுவார் என்று அவர் தலைமையில் செயற்படும் கட்சி அறிவித்துள்ளது.

மலேஷியாவில் சிறுபான்மையினராக இருக்கும் இந்தியர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்றும், இந்திய இனம் அழிக்கப்பட்டு வருவதாகவும் கூறி அங்குள்ள இந்தியர்களின் இந்து உரிமை நடவடிக்கைக் குழு என்ற பெயரில் தனி அமைப்பைத் தொடங்கினார்கள். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்களை அரசு கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது.

இந்த நிலையில் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் மலேஷிய இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் டத்தோ சாமிவேலு கலந்துகொண்ட கூட்டங்களில் அவருக்கு எதிராக இந்தியர்கள் முழக்கமிட்டனர். அவரைக் கேலி செய்தும் விமர்சனம் செய்தும் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்தனர். இந்தியர்களுக்காக எதையும் அவர் செய்யவில்லை என்று விமர்சனம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து அண்மையில் கலைக்கப்பட்ட மலேஷிய அரசில் அமைச்சாராகவிருந்த சாமிவேலு, இந்தியர்கள் விரும்பாவிட்டால் தான் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று அறிவித்தார். கட்சித் தலைவர் பதவியில் மட்டும் நீடிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால், மலேஷிய இந்தியக் காங்கிரஸ் வெளியிட்ட வேட்பாளர் பட்டியலில் அவர் பெயர் இடம்பெற்றுள்ளது. சாமிவேலு தேர்தலில் போட்டியிடுவார் என்று அவரது கட்சி அறிவித்துள்ளது.

சாமிவேலுவுக்கு [illegible] 72 [illegible] கிறது.

## சுகவீனமுற்ற ஷேக் ஹசீனா மருத்துவமனையில் சேர்ப்பு

டாக்கா, பெப்.22

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா சுகவீனமுற்ற நிலையில் நேற்றுக் காலை டாக்காவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் உயர் இரத்த அழுத்தம் மற்றும் காது,கண் நோய் காரணமாக ஷேக் ஹசீனா அவதிப்பட்டு வந்தார். அதற்காக மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதற்கு கடந்தவாரம் அவர் மறுப்பு தெரிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நேற்று மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றார் என்றும் மாலையளவில் சிகிச்சைகளை முடித்துக்கொண்டு சிறைக்குத் திருப்பி அழைத்துவரப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

[illegible] நோய்க்கு சிகிச்சை பெற அமெரிக்கா செல்ல அனுமதி வேண்டும் என அந் நாட்டு [illegible] வேண்டுகோள் விடுத்த போது அவசரகாலசட்டத்தின் கீழ் இவ்வாறான பயணங்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்று அரசு மறுப்புத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா தனது 60ஆவது வயதில் சசிகலாவுடன் மாலை மாற்றினார்!



சீர்காழி,பெப்.22

முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா, நேற்றுமுன் தினம் புதன்கிழமை நாக பட்டினம், திருக்கடையூரில் உள்ள அமிர்தகடேஸ்வரர் கோவிலுக்குச் சென்று அங்கே தோழி சசிகலாவுடன் மாலை மாற்றிக்கொண்டார்.

ஜெயலலிதாவின் 60ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையின்போதே மாலை மாற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

பொதுவாக 60 வயதான தம்பதியரே தமது மணிவிழா நாளையொட்டி திருக்கடையூர் கோயிலில் இத்தகைய சம்பிரதாயத்தை நிறைவேற்றிக்கொள்வது வழக்கம். ஆனால், வழக்கத்துக்கு மாறாக பெண்கள் இருவர் இவ்வாறு மாலை மாற்றிக் கொண்ட இந்த வைபவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

1990களில் ஜெயலலிதாவும் சசிகலாவும் கும்பகோணத்தில் கலந்துகொண்ட மகாமகம் நிகழ்ச்சியும் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# கிழக்கில் ஓகஸ்ட் மாதம் மாகாண சபைத் தேர்தல்

கொழும்பு,பெப்.22

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித்தேர்தலுக்குப்பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் கிழக்கு மாகாணசபைத்தேர்தல் நடத்தப்படும்.

இப்படி மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (சி)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் இடம்பெறும் தாக்குதல்கள் அனைத்தும் கிளிநொச்சியில் இருந்தே திட்டமிடப்படுகின்றன. அவ்வாறான ஓர் இடத்தில் இருந்து வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இவ்விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என்ற வேறுபாடு கிடையாது. இந்தச் சோதனை நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்க முடியாது - என்றார்.

ஜெயராஜின் இக்கூற்றுக் காரணமாக சிவநேசனுக்கும் ஜெயராஜுக்குமிடையில் சபையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (சி)

## ஒற்றையாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை கண்காணிப்பு அலுவலகத்தை, இலங்கையில் நிறுவுவதை இலங்கை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான முயற்சியை வலுப்படுத்த வேண்டும் என்றும் -

கருணாவிற்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டிற்கு அவசியமான சாட்சியங்களை சேகரிப்பதில் உதவவேண்டும் என்றும் -

அந்த அமைப்பு சர்வதேச சமூகத்தைக் கேட்டுள்ளது.

### கிழக்குத் தேர்தலை பிற்போடவேண்டும்

இலங்கையின் கடும்போக்கு அரசியல்வாதிகள் மனிதாபிமான அமைப்புகளுக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளிலிருந்து இலங்கை அரசு அந்த அமைப்புகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் உட்பட சகல ஆயுதக் குழுக்களதும் சட்டவிரோத நடவடிக்கைகள் கைவிடப்படும் வரை - அரசியல் கட்சிகளினது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை - இலங்கை அரசு தேர்தலை கிழக்கில் பிற்போட வேண்டும் -

சகல இராணுவ நடவடிக்கைகளையும் சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் -

கிழக்கு மாகாணத்தில் தற்போது காணப்படும் தனியான இராணுவ ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்றும் - அந்த அமைப்பு தனது அறிக்கையில் கோரியிருக்கின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதற்கு இணங்கி புலிகள் பேச்சுக்குப் போக வேண்டுமெனவும் அந்த அமைப்புக் கேட்டுள்ளது. (சி)

## பீரங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைகளைப் பயன்படுத்தி பாதுகாப்பு முன்னரங்க வலயங்களில் கடமையாற்றும் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கக் கூடும் என்று கருதியே அவை மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில்இருந்து நேற்றிரவு வரை எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, மன்னார் - பள்ளி முனை, காட்டுப் பள்ளிக் கடற்கரை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 80 சிமெந்து பைகளை படையினர் கைப் பற்றியுள்ளனர் என்றும் -

இவை, விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## வன்னிப் பகுதியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட படையினர் அந்த அனுமதியை நிறைவேற்றவிடாது தடுக்கின்றனர்.

இதே நிலைமைதான் முல்லைத்தீவு மாவட்டத்திலும் நிலவுகின்றது. இதன் காரணமாக மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

மன்னார் மற்றும் வவுனியாவில் அரச கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள வைத்திய சாலைகளுக்குத் தேவைப்படுகின்ற மருந்துப் பொருள்களை வழங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்கிய போதிலும் அவற்றை அங்கு கொண்டு செல்லவிடாமல் படைத்தரப்பு தடுக்கின்றது.


வைத்திய ஊழியர்களின் வாகனங்கள், அம்புலன்ஸுகள் அவசர சேவைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களின் வாகனங்கள் மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாகச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தநிலை நீக்கப்பட வேண்டும்.

வவுனியா - கொழும்பு ரயில்சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் பெரும் பாதகமான விளைவுகளை எமது மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் . சுதந்திரமாகப் பயணம் செய்யும் அவர்களின் உரிமைகள் இதன் மூலம் பறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமைகள் காரணமாக எமது மக்கள் துன்பங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவை பாரிய மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

அரசு இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து இத்துன்ப நிலையை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறான மனித உரிமை மீறல் நடவடிக்கையை அரசு உடன் நிறுத்த வேண்டும். - என்றார். (அ-2)




# ரெஜி ரணதுங்க நேற்று எம்.பியாகப் பதவியேற்பு

கொழும்பு,பெப்.22

சப்ரகமுவ மாகாண ஆளுநராக இது வரை பணியாற்றி வந்த முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்க நேற்று ஆளும்கட்சி எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வாகன விபத்தில் உயிரிழந்த சிறிபதி சூரியாராய்ச்சியின் இடத்துக்கே முன்னைய பொதுத் தேர்தல் முடிவுகளின்படி விருப்பு வாக்குகளின் வரிசையில் அடுத்த நிலையில் இருந்த ரெஜி ரணதுங்க எம்.பி யாகத் தெரிவானார்.

முன்னர் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவரும், தற்போது இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரும், எம்.பியுமான அர்ஜுன ரணதுங்கவின் தந்தையே ரெஜி ரணதுங்கவாவார். இப்போது தந்தையும் மகனும் அரசுத் தரப்பில் ஒரே சமயத்தில் எம்.பியாக இருக்கின்றனர்.

நாடாளுமன்றில் இப்போது இருவரது ஆசனங்களும் அருகருகே இருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று ரெஜி ரணதுங்க சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட சமயம் அர்ஜுண ரணதுங்க சபைக்கு வந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் கூடிய போது சபாநாயகர் முன்னிலையில் ரெஜி ரணதுங்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# புத்தல பகுதியில் நேற்றும் தேடுதல்

கொழும்பு, பெப்.22

புத்தல, கதிர்காமம் வீதியில் நேற்றுக் காலைமுதல் இராணுவத்தினர் கடும் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் அப்பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 3 படையினர் உயிரிழந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

புத்தலப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த சம்பவங்களில் 48பேர் உயிரிழந்ததுடன் 70 பேர் வரை காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## அடக்குமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வந்து கொண்டிருந்தோம்.

அப்போது ஓமந்தைச் சோதனைச் சாவடியில் எமது வாகனத்தைப் படையினர் சோதனையிட்டனர். தொடர்ந்து நாம் மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்கப்பட்டோம்.

மதவாச்சியில் வைத்து மீண்டும் சோதனை செய்யப்பட்டோம். அப்போது எனது வாகனம் சுமார் 30 நிமிடங்கள் துருவித் துருவிச் சோதனை செய்யப்பட்டது.

### மோப்பநாய்களை அருகில் கொண்டு வந்து என்னை அவமானப்படுத்தினர்

மோப்ப நாய்கள் கொண்டும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது என்னை அவமானப்படுத்தும் வகையில் அந்த மோப்ப நாய்களை எனக்கு அருகில் கொண்டு வந்தும் படையினர் கேவலமாக நடத்தினர்.

நாம் சோதனை செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், எம்மை அவமானப்படுத்தும் வகையில் - அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் - இவ்வாறு நாய்களை எமக்கருகில் வைத்துக்கொண்டு சோதனை செய்வதை எம்மால் ஏற்க முடியாது.

இது எமது சிறப்புரிமையை மீறும் செயற்பாடு. எம்மை நீங்கள் இவ்வாறு அவமானப்படுத்துவதை விட எம்மை நாங்களே ஆள அனுமதித்துவிட்டு உங்கள் பாட்டில் உங்கள் வேலையைப் பாருங்கள்.

அரசின் இவ்வாறான மிரட்டல்கள் தொடர்ந்தால் - எம்மையும் எமது மக்களையும் அடக்கி ஆள முற்பட்டால் - கொசோவோ போல் வடக்கு - கிழக்கு விரைவில் தனது நாடாக மாறும் - என்றார்.(அ-சி)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் சேவை நடத்தப்பட்டது என்றும் சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரி கள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட விமானம் திருத்தப்பட்டு ஒரு வாரத்தில் மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்கும் என்றும் நிறுவனத்தின் விமானச் சேவைகள் வழமையாக இடம்பெறும் என்றும் அதன் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ-1)

## நீதிபதிகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் அங்கம் வகிக்கும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் சார்பிலும் -

நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகள் அங்கம் வகிக்கும் நீதித்துறைச் சேவையாளர் சங்கம் சார்பிலும் -

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக் குழுவின் தலைவர் லயனல் பெர்னாண்டோ மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் உட்பட இருபது பேர் இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இலங்கை அரசமைப்பின் 170ஆவது பிரிவின் படி பொதுச் சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களிலிருந்து நீதிச் சேவையைச் சேர்ந்தவர்கள் தெளிவாகவும், துலாம்பரமாகத் தெரியத்தக்கதாகவும் வேறுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் 2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இந்த இரு தரப்பாரையும் ஒன்றாகக் கணிப்பிட்டுள்ளது என்றும் -

இதனால் நீதித்துறையைச் சேர்ந்தோர் பெரும் வருமான இழப்பை எதிர்கொள்ளும் இக்கட்டு ஏற்பட்டுள்ளது என்றும் - மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஆகையால் 2007 முதல் நீதிச் சேவைத் துறையினருக்கு உரிய வருமானம் அளிக்கக் கூடிய விதத்தில் அவர்களை வேறுபடுத்திப் பார்த்து அவர்களுக்கு உரிய சம்பள உயர்வுக்கு பணிப்புரை விடுக்குமாறு தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக் குழுவுக்கு உத்தரவிடுங்கள் என்றும் அந்த மனுவில் உயர் நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. (சி)

## கொசோவோவைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஸ்கண்டிநேவிய நாடுகள் உட்பட்ட பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் கொசோவோவை அங்கீகரிக்கவுள்ளன.

இத்தகைய புறநிலையில் நோர்வேயும் கொசோவோவை அங்கீகரிக்கவுள்ள சமிக்ஞையை வெளியிடுவது சரியான முடிவெனக் கருதுகின்றோம் - என்று ஸ்தோர தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1999 காலப்பகுதியிலிருந்து அனைத்துலக கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த கொசோவோ விவகாரம் ஏனைய இனச்சிக்கல் விவகாரங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதனை வலியுறுத்துகின்றோம்.

கடந்த ஆண்டு பின்லாந்தின் முன்னாள் அரச தலைவர் மாத்தி ஆத்திசாரியினால் (ஐ.நா.தலைமையில்) முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் கொசோவோ தேசம் கட்டியெழுப்பப்படவுள்ளது என்ற கொசோவோத் தலைவர் [illegible]டிற்கு நோர்வே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது.

மனித உரிமைகள் மற்றும் சட்ட ஒழுங்கிற்கு மதிப்பளிக்கும் அதேவேளை பல்லின கலாசார, ஜனநாயக வழியை நோக்கி கொசோவோ தேசத்தின் அபிவிருத்தி அமையவேண்டும். அத்தோடு பல்வேறு இனப் பின்னணியைக் கொண்ட மக்கள் குழுமங்களினது கலாசார மற்றும் மத உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட கடப்பாடுகளைக் கொசோவோ எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்பதில் கொசோவோவுடனான எமது எதிர்கால உறவு தங்கியுள்ளது என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றோம்.

இத்தருணத்தில் சேர்பியா மற்றும் சேர்பியத் தலைவர்களுடனான நோர்வேயின் நெருங்கிய உறவினையும் சுட்டிக் காட்டுகின்றோம். பல ஆண்டுகளாக சேர்பியாவுடன் நோர்வே பேணி வரும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் கூட்டுச் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக நோர்வே முக்கியத்துவம் கொடுக்கும் என்பதனை உறுதிப்படுத்துகின்றோம் - என்று நோர்வே வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org